
54 454

வருட சந்தா ரு. 3 Rgd. No. M. 2419



19 JAN

# மாத்வமித்திரன்.

# The Madhwa Mitran.

Editor, Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.





| | | |
|---|---|---|
| Vol 5. | ஆங்கீரஸ ஸம்வத்ஸரம் | No 6 |
| | புஷ்ய மாஸம் | |
| புஸ்தகம் 5 | பௌர்ணமி (11—1—33.) | நெ 6 |





| செ. | பொருளடக்கம். | பக்கம் |
|---|---|---|


1. சிறுவர்களுக்கான கதை 161
2. ஆசாரமாலே 164
3. காடக உபநிஷத் 165
4. சண்டாள ஸம்பர்க்கம் 169
5. ஸ்ரீ தாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) 173
6. கும்பகோணத்தின் மகாத்மியம் 177
7. திருப்பதி ஸபைகள் 185
8. விசேஷ தினங்கள் 188
9. ஸ்ரீ ...த்திரட்டு 189
10. ... 191

JAN 1933
MADRAS

# சிறுவர்களுக்கான கதை.

## மோக்ஷத்தை அளிப்பவர் ஸ்ரீஹரியே.

### ஓர் பிசாசின் கதை.

அஷ்டதிக் பாலகர்களிலொருவனாகிய குபேரனுடன் கண்டா கர்ணனென்ற ஓர் பிசாசு இருந்தது. அவன் பரமசிவனிடம் மகா பக்தியைக் கொண்டிருந்தான். உத்தமரென்று எல்லோராலும் சொல்லப்பட்டிருந்த விஷ்ணுவின் மாகாத்மியம் சற்றும் தன் காதிற் படலாகாதென தன் காதுகளில் பெரிய மணிகளைக் கட்டிக்கொண்டிருந்தான். யாராவது அந்த விஷ்ணுவின் பேச்சை எடுத்தால் அவன் தன் தலையை அசக்குவான். உடனே பிரம்மாண்டமாய் அந்த மணிகள் சப்தித்து, அந்த சப்தத்தில் விஷ்ணு ஸம்பந்தமான எந்த பேச்சும் அவன் காதிற் படாமல் போகும். காதுகளில் மணிகளைக் கட்டிக்கொண்டிருந்ததால் அவன் கண்டாகர்ணனெனப்பெயர் பெற்றான். இப்பேர்ப்பட்ட சிவ தீக்ஷையைப் பெற்று கண்டா கர்ணன் தன் தம்பியோடு பரமசிவனை ஆராதித்து பரமசிவனை ப்ரஸன்னமாக்கிக்கொண்டான். அவர் என்ன வரம் 'வேண்டுமென்று கேட்க மகாதேவா! எனக்கு மோக்ஷம் வேண்டும். அதைத் தாங்கள் தந்தருள்வீராக என்று யாசித்தான். அதற்கு பரமசிவன் கண்டா கர்ணா! நீ என் உண்மையான பக்தனே! ஆயினும் எனக்கு அதைத்தர சக்தியில்லை. "முக்திப்ரதாதா ஸர்வேஷாம் விஷ்ணுரேவ நஸம்சய:" உலகத்தாருக்கு மோக்ஷத்தைத் தரக்கூடியவர் ஸ்ரீஹரியே. இதில் சற்றும் சம்சயப்படாதே. அந்த பரப்ரம்மம் தற்போது பூபாரத்தைத் தொலைப்பதற்காக ஸ்ரீகிருஷ்ணனாய்ப் பூமியில் அவதரித்து மேற்கு ஸமுத்திரக் கரையிலுள்ள துவாரகா நகரத்தில் வாஸம் செய்துவருகிறார். இங்கு கைலாஸம் வர தற்போது கங்கையின் வடகரை பதரிகாசிரமத்தில் தங்கியிருக்கிறார். அவரை சரணமடை. அவரைத் தவிர வேறு கதியில்லை என்றார். சிவபக்தனான கண்டா கர்ணன் சிவனுக்கும் ஈசுவரன் விஷ்ணு என்பதை சிவனிடமிருந்தே தெரிந்துகொண்டு இதுவரை சிவனே ஸர்வோத்தமனென எண்ணியது தவறென உணர்ந்து விஷ்ணு த்வேஷம் செய்ததைப்பற்றி பச்சாத்தாபமடைந்து, தன் நண்பனான குபேரனிடமிருந்து ஸ்ரீவிஷ்ணுவின் மகாத்மியத்தைக் கேட்டு, விஷ்ணு பக்தியை அடையப்பெற்று, ஸ்ரீகிருஷ்ணரை தரிசித்து அவரை சரணமடைய, தன் தம்பியுடனும் தன் ஏராளமான பிசாச சைனியங்களுடனும், வேட்டை

நாய் கூட்டங்களுடனும், பிரயாணம் புறப்பட்டு பதரிகாசிரமம் அரண்யத்தின் வழியாய் வந்தான். அந்த கமல நேத்ரனான ஸ்ரீகிருஷ்ணர் த்வாரகையிலிருந்து கருடாரூடராய் வந்து மகரிஷி ஜனங்களால் மகரிஷிகளின் போஜன ரீதிப்படி ஆதித்யம் பெற்று, மறுநாள் பரமபாவனமான கைலாஸ மலை ஏற அன்றிரவு பரிசுத்தமாயிருக்க ஸமாதி நிலையில் அமர்ந்திருந்தார். கண்டா கர்ணனுடைய ஏராளமான ஸைனியங்களின் பயங்கரமான ஆரவாரத்தால் ஸ்ரீகிருஷ்ணனின் ஸமாதிநிலை கலைந்தது. பகவான் கண்ணைத் திறந்து பார்க்கவும் பதினாயிரக்கணக்கான பிசாசுகள் தம் பெண்டு பிள்ளைகளுடன் பிரயாணம் புறப்பட்டிருப்பதையும், அக்கூட்டத்தின் பின்னே பல பிசாசுகள் பந்தங்களை பிடித்துக்கொண்டு வழிகாட்ட, கோரமான சரீர அவயவங்களுள்ள இரண்டு பெரிய பிசாசுகள் ஹாஹாவென்று சப்தம் செய்துகொண்டு, மாமிஸ பிண்டத்தை புஜித்துக்கொண்டு அதிலுள்ள ரக்தத்தைப் பருகிக்கொண்டு சரீரமெல்லாம் நரம்புகளைச் சுற்றிக்கொண்டு அநேக மனுஷ்யர்களின் சிரங்களைக் கோர்த்த சூலத்தை சுழற்றிக்கொண்டு, கிருஷ்ணா கிருஷ்ணாவென்று நாமோச்சாரம் செய்துகொண்டு, வருவதையும் கண்டார். அந்த தலைவர்களில் மூத்தவன் தான் கண்டா கர்ணன். மற்றொருவன் அவனுடைய தம்பி. கோடி மன்மதாகாரனாய் அழகிய சரீரத்துடன் வீற்றிருந்த ஸ்ரீகிருஷ்ணனைக்கண்டு கண்டா கர்ணன் "ஹே ஸுந்தர புருஷா! நீ யார். இந்த கோரமான அரண்யத்தில் ஏன் தனியாய் வீற்றிருக்கிறாய். விஷ்ணுவைப்போல் பரமஸுந்தரனாய் இருக்கிறாயே! எங்களை அனுக்ரஹிக்க வந்த கிருஷ்ணன்தானோ நீ என்று ப்ரச்னம் செய்தான். அதற்கு பகவான் நான் ஓர் க்ஷத்திரியன். யதுவம்சத்தைச் சேர்ந்தவன். இந்த தேசத்திற்கு அரசன். துஷ்டர்களை சிக்ஷிப்பவன். நீங்கள் யார் என்பதைச் சொல்லுங்கள். மகரிஷிகளின் இந்த தபோவனத்தில் உங்களைப்போன்ற துஷ்ட பிசாசுகள் பிரவேசிக்கலாகாது. மேலும் இந்த நாய்க் கூட்டங்கள் இங்குவரத் தகுந்ததல்ல. இது வேட்டையாடத் தகுந்த இடமுமில்லை. உங்கள் இந்த சப்தத்தால் மகரிஷிகள் செய்துவரும் தபஸ் கலைந்துபோகும். ஆதலால் இந்த வனத்திற்குள் இனி ப்ரவேசிக்காமல் திரும்பிவிடுங்கள், நான் ஆக்ஞாபிக்கிறேன். மீறி நடந்தால் நீங்கள் என் சிக்ஷைக்குள்ளாவீர்கள் என்றார். அதற்கு கண்டா கர்ணன் தன்னுடைய விருத்தாந்தத்தை அறிவித்து மோக்ஷம் வேண்ட, ஸ்ரீகிருஷ்ணனை தரிசிக்க பிரயாணம் புறப்பட்டிருப்பதாய்ச் சொல்லி, தன் கர்மானுஷ்டானம் செய்யும் காலம் கிட்டிவிட்டதென்று அவ்விடத்திலேயே உட்கார்ந்தான். யதேச்சமாய் மாமிஸாதிகளை புஜித்து கைகால் கழுவி ஆசமனம் செய்து நரம்பு



கவசங்களை கழற்றிப்போட்டு நாய்களையெல்லாம் வெகுதூரத்திற்கப்பால் விரட்டிவிட்டு தர்பாஸனத்தில் உட்கார்ந்து பகவன் நாமங்களைச் சொல்லிக்கொண்டு மனதை நிர்மலமாக்கி பகவானிடம் அதை நிறுத்தி ஸமாதிஸ்தனானான். இதை எல்லாம் பார்த்திருந்த பகவான் ஓர் பிசாசு தன்னிடம் இவ்வாறு ஈடுபட்டிருப்பதைப் பார்த்து அதனுடைய பக்திக்கு மகிழ்ந்து அதனுடைய ஹ்ருதய கமலத்தில் தன் ரூபத்தைக் காட்டி மறைந்தார். பகவத் தரிசனமாகிவிட்டதென்று சந்தோஷப்பட்டு ஸமாதியிலிருந்து எழுந்து தன் ஹ்ருதயத்தில் தோன்றியவர் ஸ்ரீகிருஷ்ணர்தான் என்பதைக் கண்டுகொண்டு, "அயம் விஷ்ணுரயம் விஷ்ணு இத்யூசே பிசிதாசன:" இவர்தான் விஷ்ணு; இவர்தான் கிருஷ்ணர் என்று சொல்லிச் சொல்லி கூத்தாடினான். எக்கலித்தான், கெக்கலித்தான். ஜகமறந்து அகமகிழ்ந்து, அனலைக்கண்ட மெழுகுதனைப்போல் உள்ளமுருகி ஆனந்த வெள்ளம் பெருகி வாயாறத்துதித்துப் பாடவாரம்பித்தான். இது அர்க்யம், இது பாத்யம், இது ஆசமனீயம் என்று பூஜைகளைத்தந்து விரைவாய் ஓடி ஓர் ப்ராம்மணனைக்கொன்று அந்த புதிய ப்ரேதத்தை சமைத்து பகவன்! இதோ நைவேத்யம் மாமிஸம் புஜிப்பவர்களின் சாஸ்திரத்தில் இது உத்தமமான ஆகாரமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று ப்ரார்த்தித்தான். அந்த பிசாசு தன்னுடைய ஜாதி வழக்கப்படி செய்த பூஜைகளை பகவான் ஆனந்தமாய் ஏற்றுக்கொண்டு அதை சிலாகித்து கண்டா கர்ணா! உன் பூஜையால் மிகவும் மகிழ்ந்தேன். என் ஜாதி வழக்கப்படி நான் ப்ராம்மணனின் மாமிஸத்தைத் தொடவும் தகாது. தர்மத்தை விரும்பும் யாவராலுமே ப்ராம்மணன் எப்பொழுதும் பூஜிக்கத்தகுந்தவன். கோரமான காரியங்களைச் செய்யும் பிசாசுகள் விளையாட்டாய் ப்ரம்மஹத்யையைச் செய்துவிடுகின்றன. ப்ராம்மணர்களைக் கொல்லலாகாது அவர்களை ஹிம்ஸிப்பதும் நரகத்திற்குக் காரணம். உன் பக்தியால் மகிழ்ந்தேன். உன் மனம் நிர்மலமாயிருப்பதே என் சந்தோஷத்திற்குக் காரணம். யாவருக்கும் சித்த சுத்தி மிகவும் அவசியமென்று சொல்லி அவனுடைய சரீரத்தை தன் கையால் ஸ்பரிசித்தார்; அவனுடைய பாபமெல்லாம் விலகி திவ்ய ரூபங்கொண்டவனானான். அப்படியே அவனுடைய தம்பியையும் அனுக்ரஹித்தார். ஓர் மன்வந்தரம்வரை ஸ்வர்க்கலோகத்தில் வசித்திருந்து பிறகு தன் ஸாயுஜ்ய மோக்ஷம் கிடைக்குமென்று அனுக்ரஹித்து இன்னமும் என்ன வரன் வேண்டுமென்று கேட்டார். அதற்கு அவன் தன் மனது பாபபுத்திகொள்ளாமல் ஸ்ரீஹரிபக்தியுடனிருக்க வேண்டினான். பகவான் அவ்வாறே வரனைத்தந்து இறந்துகிடந்தஅந்த ப்ராம்மணனை உயிர்ப்பித்து அவனை பூஜித்து அவனால் ஆசீர்வாதம் பெற்றார். இவ்வாறு கண்டாகர்ணன் தான் விரும்பிய மோக்ஷத்தை ஸ்ரீஹரியிடமிருந்துதான் பெற்றான்.

**இக்கதையினின்றும் வெளியாகும் ப்ரமேயங்களை எல்லாம் எழுதிப்பார்க்க.**

# ஆசாரமாலை.

(62-பக்கம் தொடர்ச்சி.)

அசக்தர்கள் வெந்நீரில் ஸ்நானம் செய்யலாம். வெந்நீர் உபயோகப்படுத்தப்படவேண்டிய விதம் யாதெனில் முதலில் குளிர்ந்த தண்ணீர் வார்த்து அதில் வெந்நீரை சேர்த்து அதன்மீது குளிர்ந்த தண்ணீரை சேர்க்கவேண்டும். அந்த ஜலம்தான் பரிசுத்தமான வெந்நீராகும். ஜலம் இயற்கையாகவே பரிசுத்தமானது. அதிலும் அக்னி ஸம்பந்தம் ஏற்பட்டபின் வெந்நீர் மிகவும் பரிசுத்தமாகிவிடுகிறது. மேற்கண்ட விதமாய் சீதள ஜலத்தைச் சேர்த்து ஸ்நானத்திற்கு யோக்யமாய் செய்துகொள்ளவேண்டும். வெந்நீரில் ஸ்நானம் செய்யும்பொழுது, ஸங்கல்ப ஸூக்தத்தைச்சொல்வதும் மார்ஜனம் செய்துகொள்வதும், அகமர்ஷண ஸூக்தத்தைச் சொல்வதும், தேவாதிகளின் தர்ப்பணமும்செய்யலாகாது. ஸ்நானத்தின் மத்தியில் ஆசமனம் செய்யலாகாது. முடிந்தபின்தான் ஆசமனம் செய்யவேண்டும். பகலில் குளிர்ந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யலாம். இரவில் ஸ்நானம் செய்ய நேர்ந்தால் வெந்நீரில் ஸ்நானம் செய்யவேண்டும். ஓர் உற்சவம் முடிந்தபின்பும், கல்யாணத்தை முடித்தபின்பும் ஸுஹ்ருத்துக்களையும் பந்துக்களையும் வெளியே அனுப்பித்தபின்பும் இஷ்ட தெய்வத்தை பூஜை செய்தபின்பும் போஜனம் செய்த பின்பும் வியாதியால் ஸங்கடப்பட்டிருக்கையிலும் ஸ்நானம் செய்யலாகாது. நதிமுதலியவைகளில் அப்யங்கஸ்நானம், ஆரோக்யஸ்நானம், மங்களஸ்நானம் இவைகள் செய்யலாகாது. உஷ்ணோதகத்திலேயே ஸ்நானம் செய்யவேண்டும். அப்யங்கம் செய்துகொள்ளுமுன் கால்களைக் கழுவிக்கொண்டு ஆசமனம் செய்துகொண்டு, ஸங்கல்பம் செய்துகொண்டு பூமியில் நவக்ரஹாதி தேவதைகளை உத்தேசித்து எண்ணெயை சிறிது வார்த்துவிட்டு அப்யங்கம் செய்துகொள்ள வேண்டுமென்று ஓர் தர்ம சாஸ்திரம் கூறுகிறது. எள்ளு எண்ணெயை அப்படியே காய்ச்சாமல் தேய்த்துக்கொள்வது நிஷேதிக்கப்பட்டிருக்கிறது ஆகவே அதில் வேறு பதார்த்தங்களையாவது புஷ்பங்களையாவது சேர்த்துதான் ஞானிகள் ஸ்வீகரிக்கின்றனர். நெய், கடுகு எண்ணெ, புஷ்ப வாஸனைக்கொண்ட தைலம் வேறு பதார்த்தங்களைப் போட்டுக் காய்ச்சின எண்ணெ, வாஸனை தைலம், காய்ச்சின எண்ணெ எப்போதும் தோஷமாகாது. பானுவாரம், மங்களவாரம் இந்த வாரங்களில் புத்திமான் ப்ரயத்னபூர்வமாய் அப்யங்கம் செய்துகொள்வதை விலக்கவேண்டும். (தொடரும்.)



# காடகோபநிஷத்.

(முன் தொடர்ச்சி.)

உங்கள் யோக்யதைப்படி சிறிதுதான் தெரியவரும். நீங்கள் அறிய யோக்யதை இல்லாத சில விஷயங்கள் உங்களுக்குத் தெரியாததுதான். 15. அதை ஸம்பூர்ணமாய் எப்படி அறிவேனென்றால் அந்த பரமாத்மஸ்வரூபத்தை சூர்யாதிகள் ப்ரகாசப்படுத்தாது. சந்திரன் ப்ரகாசப்படுத்தமாட்டான். நக்ஷத்திரங்கள் ப்ரகாசப்படுத்தமாட்டா. இந்த மின்னல்கள் ப்ரகாசப்படுத்தமாட்டா. இப்படியிருக்க இந்த அக்னி ப்ரகாசப்படுத்தமாட்டாதென்று சொல்லவும் வேண்டுமோ? ப்ரகாசித்துவரும் அந்த பகவானை அனுஸரித்துத்தான் சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் முதலான எல்லா தேஜஸ் ஸமூகங்களும் பிரகாசிக்கின்றன. அவருடைய காந்தியால்தான் இந்த எல்லா ப்ரபஞ்சமும், ப்ரகாசிக்கிறது. பரமாத்மாவின் ரூபத்தை அவரே ப்ரகாசப்படுத்தவேண்டுமே ஒழிய வேறு எதைக்கொண்டும் முடியாது.

*இரண்டாவது அத்யாயம் இரண்டாவது வல்லி முடிந்தது.*

## இரண்டாவது அத்யாயம், மூன்றாவது வல்லி.

பகவானுடைய மஹிமை ஸாதுக்களின் புத்தியிலேற உலகப்பிரஸித்தமான திருஷ்டாந்தத்துடன் அறிவிக்கப்படுகிறது. (1) இந்த ஜகத்து அசுவத்த விருக்ஷம்போலுள்ளது. இதற்கு பூமியைப்போல் மூலமாயுள்ளவர் ஸர்வோத்தமரான பகவான். பூமிக்குள் சென்றிருக்கும் இந்த விருக்ஷத்தின் மூலம் ஸ்ரீதத்வம். அதமர்களான தேவர்கள் கிளைகள். அப்பேர்ப்பட்ட இந்த ஜகத்தாகிற விருக்ஷம் பரம்பரையாய் அநாதியாயுள்ளது. அதன் ஊர்த்வமான மூலமாகிய பகவான் சோகமில்லாதவர். அவரே குணபூர்ணர். அவரே நாசமில்லாதவரென வேதாதிகளில் சொல்லப்பட்டிருக்கிறார். அவரிடம் எல்லா ஜனங்களும் ஆசிரயித்திருக்கின்றனர். அப்பேர்பட்ட ஸர்வலோகாசிரயரான பகவானை குணத்தாலோ, ஸ்வரூபத்தாலோ, ஒருவரும் மீறுவதில்லை. நசிகே

தஸ்ஸே! நீர் கேட்ட பரப்ரம்மம் இப்பேர்ப்பட்ட குணமுள்ளவர். (2) இந்த கண்ணிற்படும் உலகம் ப்ராணரெனப் பெயர்கொண்ட எந்த பகவானிடமிருந்துவருகிறதோ, எந்த ப்ராணரிடமிருந்து பிறக்கிறதோ, எந்த ப்ராணரின் ப்ரேரணையால் காரியங்களைச் செய்கின்றனவோ, அந்த பகவான் வஜ்ஜிராயுதம்போல் மகா பயத்தைத் தருகிறவர். மேலான எத்தனங் கொண்டவர். இவ்வாறு அந்த பகவானை யார் அறிகின்றனரோ அவர்கள் முக்தர்களாவார்கள். (3) வஜ்ஜிராயுதம்போல் பயத்தைத்தருபவராய் எப்படி ஆவாரென்றால் அவருடைய பயத்தால் அக்னி தகிக்கிறான். அவருடைய பயத்தால் சூரியன் காய்கிறான். அவருடைய பயத்தால் இந்திரன் வர்ஷிக்கிறான். வாயு சுத்தி செய்கிறான். இந்த தேவர்களில் ஐந்தாவதாகிய மிருத்யுவெனப் பெயர்கொண்ட நான் ப்ராணிகளைக் கொல்ல தாவுகிறேன். (4) [பாலியத்திலேயே நசிகேதஸ்ஸு இப்பேர்ப்பட்ட ஞானத்தை ஸம்பாதித்துக்கொண்டதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு இப்படியே இதரர்களும் ஸம்பாதித்துக்கொள்ளலாமென அப்பேர்ப்பட்டவர்களுக் கேற்படும் பலனைச் சொல்லுகிறார்.] இம்மானிட சரீரத்தில் பாஞ்ச பௌதிகமான இச்சரீரம் நசித்துப்போகும் முன் யார் இதை அறிவதற்கு சக்தராகிறாரோ அந்த அதிகாரி அந்த பகவத் ஞானத்தாலேயே வைகுண்டாதிகளில் அப்ராகிருதமான ஞானானந்த ஸ்வரூபமாயுள்ள சரீரத்திற்காளாகிறார். என்றால் முக்தராகிறாரென்று தாத்பரியம். (5) மேற்கண்ட உபாயங்களால் ஏற்படும் பகவத் ஞானம் ஒரே வகையானதல்ல. ஜீவனிடம் அந்தர்யாமியாயுள்ள பகவான் கண்ணாடியில் முகம் எப்படி காணப்படுகிறதோ அம்மாதிரி வெகு ஸ்பஷ்டமாய் ஞானதிருஷ்டியுள்ளவர்களுக்குக் காணப்படுகிறார். ஸ்வப்னத்தில் எப்படி வஸ்துக்கள் அவ்வளவு ஸ்பஷ்டமாய் காணப்படுவதில்லையோ அப்படி பித்ரு லோகத்தில் அவ்வளவு அஸ்பஷ்டமாய் காணப்படுகிறார். ஜலத்தில் எப்படி ப்ரதிபிம்பம் காணப்படுகிறதோ அப்படி கந்தர்வ லோகத்தில் பகவான் பித்ருலோகத்தைவிட சிறிது ஸ்பஷ்டமாய் காணப்படுகிறார். ப்ரம்மலோகத்தில் பகவான் நிழல் வெய்யில் இவை இரண்டுமுள்ள பகலில் அத்யந்தம் ஸ்பஷ்டமாய் வஸ்து காணப்படுவதுபோல்



காணப்படுகிறார். (6) எதை அறிந்தால் மோக்ஷம் வருமென்றால் வெவ்வேறாய் உண்டாகும் இந்திரியங்களின் ப்ரதீதி முதலியவைகளும் இந்திரியாபிமானிகளின் தாரதம்யமும் ஜகத்தின் உதயம், அஸ்தமயம் இவைகளும் பகவானுடைய அதீனமென்று அறிந்தால் ஞானி முக்தனாகிறான். (7) [இம்மட்டில் அறிந்தால் போதாதென்றும் தாரதம்ய ஞானத்துடன் பகவத் ஞானம் அவசியமென்றும் சொல்லப்படுகிறது.] இந்திரியாபிமானி தேவர்களான சந்திரன் குபேரன் சூரியன் முதலானவர்களைவிட மனோபிமானிகளான கருட சேஷருத்திரன்கள் சிரேஷ்டர்கள். மனோபிமானி தேவர்களைவிட புத்தி அபிமானியான ஸரஸ்வதி தேவி சிரேஷ்டை. அந்த புத்தி அபிமானியைவிட மகத்தத்வாபிமானியான ப்ரம்மா உத்தமர். அந்த மகத் தத்வாபிமானியைவிட அவ்யக்த தத்வாபிமானியான மகாலட்சுமி உத்தமள். (8) அவ்யக்த தத்வாபிமானியைவிட புருஷரெனப் பெயர்கொண்ட பகவான் உத்தமர். அவர் அளவில்லாதவர். ப்ராகிருதமான பாஞ்ச பௌதிக சரீரமில்லாதவர். இப்பேர்ப்பட்ட தாரதம்யத்தில் கடைசியில் உள்ளவரென்று அதிகாரி ஜீவன் அறிந்து ஸம்ஸார பாசத்தினின்றும் விடுதலையடைகிறான். புனர்ஜனனமில்லாததான மோக்ஷத்தை அடைகிறான். (9) [முக்திக்குக் காரணமாயுள்ள பகவத்ஞானம் சக்ஷுஸ் முதலான இந்திரியங்களால் சிரமமின்றி வரக்கூடியதன்று. பக்தி சிரவணமனனாதிகளுடன் கூடிய மனதால் ஏற்படக்கூடியதென்கிறார்.] நானாவதாரங்களுக்குக் காரணமாயுள்ள மூல ரூபமாகிய இந்த பகவத்ரூபம் அசிந்த்யமான மகிமையுடையதாலும் அவ்யக்தமாகவேயுள்ள ஸ்வபாவத்துடன் கூடியிருப்பதாலும் ஸம்பூர்ணமான ஞானத்திற்கு விஷயமாவதில்லை. சக்ஷுஸ் முதலான இந்திரியங்களாலும் இவரை யாரும் பார்ப்பதில்லை. மத்ஸ்ய கூர்மாதி அவதாரங்கள் கண்ணால் பார்க்கப்படுகிறதே என்றால் மூல ரூபத்திற்குத்தான் இது சொல்லப்பட்டிருக்கிறதென்றறியவேண்டும். ஆனால் அவர் எதனால் அறியப்படுகிறாரென்றால் சிரவண மனனத்யான பக்தி முதலான ஸாதனைகளைக்கொண்ட மனதால் ஞானரூபியான பகவான் அறிந்துகொள்ளப்படுகிறார். இப்பேர்ப்பட்ட பகவானை யார் அறிவார்களோ அவர்கள் முக்தர்களாகின்றனர்

10. [ஞானத்திற்கு முக்ய ஸாதனம் யாதென்பதற்கு ப்ரத்யாஹாரத்தால் ஸித்தமான தாரணாரூபமான த்யானமென்று சொல்லப்படுகிறது.] ஞானத்திற்கு ஸாதனங்களான சக்ஷுஸ் முதலிய பஞ்ச ஞானேந்திரியங்கள் மனதுடன்கூடி விஷயங்களில் செல்லாமல் எப்பொழுது நிற்கின்றனவோ, புத்தியும் விஷயங்களில் ப்ரவிருத்திப்பதில்லையோ, அந்த காலத்தில் விஷயங்களினின்றும் அந்த ஏழு இந்திரியங்களின் ப்ரத்யாஹாரமானது ஞானத்திற்கு முக்ய ஸாதனமாகும். 11. [ப்ரத்யாஹாரம் எப்படி பரம ஸாதனமாகும்; த்யானம் ஸமாதியாகிய யோகமும் அப்படியே இருக்கிறதே என்றால்] இந்திரியங்களை விஷயங்களில் விடாமல் திருப்பி பகவத் விஷயத்தில் திடமாய் நிறுத்தும் அந்த தாரணையை த்யான ஸமாதியாகிய யோகமென்று ஞானிகள் அறிகின்றனர். அப்பேர்பட்ட யோக்யதை வந்தபொழுது பகவத் ஞானியாகவே ஆகிறான். ஜகத்திற்கு உற்பத்தியும், விநாசமும் பகவானிடமிருந்தே உண்டாகின்றனவென்று த்யானம் செய்வதுதான் யோகத்திற்கு விஷயம். (12) பகவான் வாக்கால் அடையமுடியாதவர். மனதால் அடையமுடியாதவர். கண்ணால் அடையமுடியாதவர் ஒருவருக்கும் பராதீனமாயில்லாமல் ஸர்வோத்தமராய் புருஷநாமக பகவான் இருக்கிறாரென்று உபதேசிக்கும் குருவால் அன்றி அந்த பகவத்ரூபம் எப்படி காணப்படும்? குருவால் ப்ரீதிபூர்வமாய் உபதேசம் செய்யப்பட்டால் குரு அருளிய சிரவணமனனாதிகளாகிய தன்னுடைய ப்ரயத்தனத்தால் பகவான் அறியப்படுவாரென்று தாத்பரியம். 13. [பகவான் ஜீவனுடைய சிரவணமனனாதி ஸ்வப்பிரயத்தனங்களால் மட்டில் அறியப்படுவதில்லை. ஆனால் அவைகளாலுண்டாகும் பகவத் ப்ரஸாதத்தால்தான் அறியப்படுவாரென்று சொல்லுகிறார்.] ப்ரகிருதி புருஷன் இருவர்களின் ப்ராமாணிகத்வத்தை ஸம்பாதித்துத்தரும் பகவானுடைய அனுக்ரஹத்தால்தான் பகவான் ஸர்வோத்தமராய் இருக்கிறாரென்று அறியவேண்டும். அவருடைய பிரஸாதமில்லாமல் முடியாது. தத்வமாகிய ப்ரகிருதி புருஷர்களின் தத்வத்தை அறிவித்துக்கொடுக்கும் பகவான், பரமாத்மா ஸர்வோத்தமராய் இருக்கிறாராதலால் அஸதி எனப்படுகிறார் என்று அறிந்தவனுக்குத்தான் அவர் பரமானுக்ரஹம் செய்பவராகிறார்.

(தொடரும்.)



# சண்டாள ஸம்பர்க்கம்.

(முன் தொடர்ச்சி.)

18 "சண்டாளை: ச்வபசைர்ஸ்பிருஷ்டே நிசி ஸ்நானம் விதியதே| நவஸேத் தத்ராத்ரௌது ஸத்ய: ஸ்நானேன சுத்யதி|| அதவஸேத்யதா ராத்ரௌ அக்ஞானதவிசக்ஷண:| ததா தஸ்யது தத்பாபம் சததா பரிவர்த்தே|| உத்கச்சந்தி ஹிநக்ஷத்ராண்யு பரிஷ்டாச்சயே க்ரஹா:| ஸம்ஸ்பிரிஷ்டே ரச்மிபிஸ் தோஷாம் உதகே ஸ்நானமாசரேத்||" சண்டாளர்கள் ச்வபசர்கள் இவர்களின் ஸ்பரிசம் ஏற்பட்டால் நடுநிசியானாலும் ஸ்நானம் செய்துவிட வேண்டுமென்பது விதி. ஓர் இரவும்கூட தாமதிக்கலாகாது. உடனே ஸ்நானம் செய்தால்தான் சுத்தி, இதை அறியாமல் முட்டாள்தனத்தால் ஓர் இரவு சும்மாயிருந்து விட்டால் அவனுடைய பாபங்கள் பல வகையாய் சிதறிப் போகின்றன. உயரத்தில் இருக்கும் நக்ஷத்திரங்கள் முதலிய கிருகங்களின் கிரணங்கள் சம்பர்தமடைந்த ஜலத்தில் ஸ்நானம் செய்தால் சுத்தி என்றார். (19) ஆபஸ்தம்பர் சொல்வதாவது "அந்த்ய ஜாதிரவிக்ஞாதோ நிவஸேத் யஸ்ய வேச்மனி| தஸ்யக்ஞாத்வாது காலேன த்விஜா குர்வந்த்யனுக்ரஹம்:| சாந்த்ராயணம் பராகோவா த்விஜாதீனாம் விசோதனம்" ஓர்சண்டாளன் இன்னானென்று தெரியாமல் ஒருவனுடைய வீட்டில் வாஸம் செய்துவந்து வெகுநாளைக்கு பிறகு அவன் சண்டாளனென்று தெரியவந்தால் அவனுடைய விஷயத்தில் ப்ராம்மணர்கள் அனுக்ரஹம் செய்வார்கள். சாந்திராயணவிரதமோ பராகமென்பதோ செய்யப்பட்டால் பிராம்மணனுக்கு சுத்தி என்றார். (20) போதாயனர் சொல்வதாவது "சண்டாள தர்சனே ஜ்யோதிஷாம் தர்சனம் ஸம்பாஷணே ப்ராம்மண ஸம்பாஷணம், ஸ்பர்சனே ஸ்நானம்" சண்டாளனைப்பார்த்தால் ஸூர்யசந்திர நக்ஷத்திராதி ஜ்யோதிஸ்ஸுகளை பார்க்கவேண்டும். சண்டாளனுடன் பேசினால் ப்ராம்மணர்களுடன் பேசவேண்டும். சண்டாளனைத் தொட்டால் ஸ்நானம் செய்யவேண்டும். (21) பாராசரர் சொல்வதாவது "ச்வபாகம்வாபி சண்டாளம் விப்ர: ஸம்பாஷதேயதி| த்விஜஸம்பாஷணம் குர்யாத் ஸாவித்ரீமது ஸக்ருஜ்ஜபேத்|| சண்டாளைஸ்ஸஹஸுப்தம்து த்ரிராத்ரமுபவாஸயேத்| சண்டாளைகபதம் கத்வாகாயத்ரீ ஸ்மரணாச்சுசி:|| சண்டாளதர்சனே ஸத்ய: ஆதித்யமவலோகயேத் | சண்டாளஸ்பர்சனே சைவ ஸசேலம் ஸ்நானமாசரேத்||" ச்வபசனையாவது சண்டாளனையாவது ப்ராம்மணன்

பேசினால் பிராம்மணனுடன் பேசி காயத்திரியை ஒருதடவை ஜபிக்க வேண்டும். சண்டாளர்களுடன் சேர்ந்து ஒரே இடத்தில் தூங்கினவனை மூன்றுநாள் உபவாஸமிருக்கச் செய்யவேண்டும். சண்டாளனுடன் ஒரே மார்கத்தில் சென்றால் காயத்ரீயை ஸ்மரித்தால் சுத்தி. சண்டாளனைப் பார்த்தால் உடனே சூரியனைப் பார்க்கவேண்டும். சண்டாளனைத் தொட்டாலோ உடுத்த வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்யவேண்டும். அவரே (22) "யுகம்யுகத்வயம் சைவ த்ரியுகம் ச சதுர்யுகம்| சண்டாளஸூதிகோதக்யா பதிதானுமத: க்ரமாத்॥" சண்டாளன், ப்ரஸவித்தவள், பஹிஷ்டை, பதிதன் இவர்களுக்கு முறையே 4, 3, 2 1, நுகத்தடி தூரம் விலகவேண்டுமென்றார். (23) (வசிஷ்டர்) சண்டாள பதிதோபஸ்பர்சனே ஸசேலஸ்நாத: ஸத்ய: பூதோபவதீதி விக்ஞாயதே॥" என்றார். சண்டாளன் பதிதன் இவர்கள் தொட்டால் உடுத்த வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்தால் உடனே பரிதத்தனாகிறானென்று சாஸ்திரங்களால் தெரியவருகிறது என்கிறார். (29) ஸம்வர்த்தர் சொல்வதாவது:—"சண்டாளபதிதச்சாயாம் ஸ்ப்ருஷ்ட்வா ஸ்நானம் ஸமாசரேத்" சண்டாளன் பதிதன் இவர்களுடைய நிழலைத்தொட்டால் ஸ்நானம் செய்யவேண்டும் மென்கிறார். (30) வ்யாக்ரரென்னும் மகரிஷியும் அவருடைய ஸ்மிருதியில் "சண்டாளோதக்யாஸம்ஸ்பிருஷ்டௌ ஸ்நானமேவஸமாசரேத்" சண்டாளன் பஷிஷ்டை இவர்களைத்தொட்டால் ஸ்நானம் தான் செய்யவேண்டுமென்கிறார். (31) (விஷ்ணுஸ்மிருதியில்) "உதக்யா சவசண்டாளா: நஸ்ரேகாஸ்தி நரோத்பவம்| ஸ்ப்ருஷ்ட்வாஸசேல: ஸ்நாயீத" என்று சொல்லப்பட்டிருக்கிறது. பஹிஷ்டை, ப்ரேதம், சண்டாளன் பசையில்லாத மனுஷ்யன் எலும்பு இவைகளைத் தொட்டால் உடுத்த வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்யவேண்டுமென்று விதிக்கப்படுகிறது. (32) விருத்தஹாரீதர் சொல்வதாவது "சண்டாள: பதிதோவாபி யஸ்மின் கேஹே ஸமாவிசேத்| த்யக்த்வா மிருண்மயபாண்டானி கோபி: ஸங்க்ராமயேத்கிருஹம்" சண்டாளனோ அல்லது பதிதனோ ஓர் கிருகத்தில் பிரவேசித்தால் அவ்வீட்டிலுள்ள மண்பாண்டங்களை வெளியே எடுத்துப் போட்டுவிட்டு அந்த வீட்டில் சிலநாள் பசுக்களை கட்டியிருந்தால் சுத்திஎன்கிறார். (33) விருத்தயாக்ஞவல்க்யர் "சண்டாள புக்கஸம்லேச்ச பில்ல பாரஸிகாதிகம்| மகாபாதகினம் சைவஸ்பிருஷ்ட்வா ஸ்நாயாத் சசேலகம்॥" சண்டாளன், புக்கஸன், ம்லேச்சன், பில்லன், பாரசிகன் முதலான ஜாதியார்களையும் மகாபாதகம் செய்தவர்களையும் தொட்டால் வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்யவேண்டுமென்கிறார்.

இப்படி சண்டாளர்களின் ஸம்பர்கம் தகாதென்பதற்கு அநேகப்ரமாணங்கள் காணப்படுகின்றன. சண்டாலஸ்பரிசத்திற்கே இவ்வளவு



தோஷமும் ப்ராயச்சித்தமும் விதிக்கப்பட்டிருக்கையில் அவர்கள் ஸ்பரிசித்தத்தை உண்பது சாஸ்திரங்கள் நிஷேதிக்கப்பட்டிருக்கு மென்பது நாம்சொல்லாமலேயே விளங்கும். ஆயினும் மாதிரிக்காக ஒரு சில ப்ரமாணங்களை இங்கு எடுத்துக் கூறுகிறோம் (33) தேவலர் சொல்வதாவது:— "சண்டாள கூபபாண்டஸ்தம் அக்ஞானாதுகம் பிபேத்| ஸது த்ரயஹேண சுத்யேத சூத்ரஸ்த்வேகேன சுத்யதி॥ சண்டாளர்களின் கிணறு, பாத்திரம் இவைகளிலுருந்த ஜலத்தை ஒருவன் அறியாமல் குடித்துவிட்டால் மூன்றுநாள் உபவாஸமிருந்தால் சுத்தி. (34) அங்கிரஸ் சொல்வதாவது.— "சண்டாள பரிகிருஹீதம் து யோக்ஞானாதுதகம் பிபேத்| தஸ்ய சுத்திம் விஜானீயாத் ப்ராஜாபத்யேன நித்யச:" சண்டாளன் எடுத்துவைத்த ஜலத்தை அறியாமல் குடித்துவிட்டால் ப்ராஜாபத்யமென்ற ப்ராயச்சித்தம் செய்துக்கொள்ள வேண்டும். (35) வியாஸர் சொல்வதாவது:— "சண்டாளபாண்டஸம்ஸ்பிருஷ்டம் பிபேத்தோயமகாமத: | அஹோராத்ரோஷித: ஸ்நாத்வா பஞ்சகவ்யேன சுத்யதி" சண்டாளனுடைய பாத்ரத்தால் தொடப்பட்ட ஜலத்தை வேண்டுமென்றில்லாமல் குடித்துவிட்டால் ஒரு இரவு பகல் பட்டினிகிடந்து பிறகு பஞ்சகவ்யம் சாப்பிட்டால் சுத்தி (36) யமன் சொல்வதாவது:— "யோபுஞ்ஜானோ அசுசிர்வாபி சண்டாளம் பதிதம் ஸ்ப்ருசேத்| க்ரோதாதக்ஞானதோ வாபி தஸ்ய வக்ஷ்யாமி நிஷ்கிருதிம்॥ ஷட்ராத்ரம் வாத்ரிராத்ரம் வா யதா ஸங்க்யம் ஸமாசரேத்| ஸ்நாத்வாத்ரிஷவணம் விப்ர: பஞ்சகவ்யேன சுத்யதி॥" ஓர் ப்ராம்மணன் போஜனம் செய்யும் பொழுதோ அல்லது அசுத்தமாயிருக்கும் பொழுதோ கோபத்தாலோ அல்லது தெரியாமலோ சண்டாளனை தொட்டுவிட்டால் அவன் செய்தபாவத்திற்கு தகுந்தபடி ஆறு அல்லது மூன்று நாட்களில் ஒவ்வொருநாளும் மூன்றுவேளை ஸ்நானம் செய்து உபவாஸம் செய்து முடிவில் பஞ்சகவ்யப்ராசனம் செய்யவேண்டும். (37) (விஷ்ணு) சொல்வதாவது:— "சண்டாளோதகஸ்ம்ஸ்பிருஷ்ட: ஸ்நானம் கிருத்வா விசுத்யதி॥" சண்டாளன் தொட்ட ஜலத்தைத் தொட்டாலுமே ஸ்நானம் செய்யவேண்டும், (38) பராசரர் சொல்வதாவது:— "சண்டாளகாதவாபீஷு பீத்வா ஸலிலமக்ரஜ: | அக்ஞானச்சைகபக்தேன த்வஹோராத்ரேண சுத்யதி॥ சண்டாளபாண்டஸம்ஸ்பிருஷ்டம் பீத்வா கூபகதம்ஜலம்| கோமூத்ர யாவகாஹார த்ரிராத்ராத் சுத்திமாப்னுயாத்| சண்டாள கட ஸம்ஸ்தம்து யத்தோயம் பிபதி த்விஜ:| தத்க்ஷணாத் க்ஷிபதே யஸ்து ப்ராஜாபத்யம் ஸமாசரேத் யதி நக்ஷிபதே தோயம் சரீரேயஸ்யஜீர்யதி| ப்ராஜாபத்யம் நதாதவ்யம் கிருச்ரம் ஸாந்தாபனம் சரேத்॥ சரேத் சாந்தாபனம் விப்ர: ப்ராஜாபத்யமனந்தரம்| ததர்தம்து சரேத்வைச்ய: பாதம் சூத்ரஸ்ததாசரேத்॥ பாண்டஸ்த மக்ஞானாம்து ஜலம் ததிபய: பிபேத்| ப்ராம்மண: க்ஷத்திரியோ வைச்ய: சூத்ரஸ்சைவ ப்ரமாதத:॥ ப்ரம்மகூர்ச்சோபவாஸேன த்விஜாதீனாம்து நிஷ்கிருதி:| சூத்ரஸ்ய சோபவாஸேன ததா தானேன சக்தித:" ஓர் பிராம்மணன் சண்டாளர்களால் வெட்டப்பட்ட

கிணறுகளிலிருந்து ஜலத்தை தெரியாத்தனத்தால் பானம் செய்துவிட்டால் ஒருவேளை போஜனம் செய்து ஓர்பகல் இரவு உபவாஸமிருந்தால் சுத்தனாகிறான். சண்டாளனுடைய பாத்திரத்தின் ஸ்பரிசம் ஏற்பட்ட கிணற்று ஜலத்தை பிராம்மணன் பானம் செய்து விட்டால் மூன்று நாள் கோமூத்திரம் யவதான்யம் இவைகளை மட்டில் போஜனம்செய்திருந்தால் சுத்தி. ஓர் பிராம்மணன் சண்டாளனுடைய பாத்திரத்திலிருந்த ஜலத்தை பானம் செய்து அந்த ஜலத்தை உடனே கொப்பளித்து விட்டால் அவன் ப்ராஜாபாத்ய பிராயச்சித்தத்தை செய்துகொண்டால் சுத்தனாகி விடுகிறான். அப்படி அந்த ஜலத்தைக் கொப்பளித்து விடாமல் அவன் வயற்றுக்குள் அந்த ஜலம் போய் ஜீர்ணத்துக்கு வந்துவிட்டால் ப்ராஜாபாத்யம் செய்து கொள்ளலாகாது. ஸாந்தாபன கிருச்ரத்தைச் செய்து கொள்ள வேண்டும். என்றால் முதலில் ஸாந்தாபன கிருச்ரத்தை அந்த ப்ராம்மணன் செய்துகொண்டு பிறகு ப்ராஜாபத்ய கிருச்ரத்தை செய்து கொள்ளவேண்டும். வைச்யனாயிருந்தால் இதில் பாதிப்ராயச்சித்தம் செய்து கொள்ளவேண்டும். சூத்ரன் இதில் கால்பாகம் செய்து கொள்ளவேண்டும். சண்டாளனுடைய பாத்திரத்திலுள்ள தயிர் பால் ஜலம் இவைகளை மோசம்போய் ப்ராம்மணனோ க்ஷத்ரியனோ வைசியனோ சூத்ரனோ பானம் செய்து விட்டால் த்விஜர்களாகிய முதல் மூன்று வர்ணத்தார்கள் பிரம்கூர்சமென்ற பிராயச்சித்தம் செய்து கொண்டு உபவாஸமிருக்கவேண்டும். சூத்ரன் உபவாஸமிருந்து அவனுடைய சக்திக்குத்தகுந்தபடி பிராம்மணர்களுக்கு தானம் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் சுத்தி. (39) சாதாதபரும் இப்படியே அபிப்பிராயப்பட்டு இதே வாக்யத்தை உதாஹரித்திருக்கிறார். (40) ஆபஸ்தம்பர் சொல்வதாவது. "சண்டாளகாதவாபீஷ்வக்ஞானத்ய: பிபேஜ்ஜலம்| உபோஷ்ய ரஜனீமேகாம் பஞ்சகவ்யேன சுத்யதி| சண்டாள பாண்டதோயம்து த்வஜ: பீத்வா விமோகித:| கிருச்ரத்ரயம் ப்ரகுர்வாணஸ்தத: பாபாத்ப்ரமுச்யதே| சண்டாளேனது ஸம்ஸ்பிருஷ்டா அபோய: பிபதித்விஜ:| சிருச்ரபாதேன சுத்யேத்து புன: ஸம்ஸ்காரமர்ஹதி| அந்த்யஜைர்கானிதா கூபாஸ்தடாகா வாப்யஏவச| ஏஷு ஸ்நாத்வாச பீத்வாச ப்ராஜாபத்யேன சுத்யதி"

(தொடரும்.)

**10-3-33** பால்குண சுத்த த்ரயோதசி சுக்ரவாரம் இந்நகரில் மகாமகம் அன்று விருஷப லக்னத்தில் காலை மணி 9½-11½க்குள் கன்யாதீர்த்தத்தில் ஸ்நானம் செய்வது ஸமஸ்த பாபங்களைப் போக்குவதுடன் மகத்தான பலனைத்தரும். இங்கு வரும் மாத்வர்கள் இப்பத்திராதிபரின் கிரஹத்தில் இலவசமாய் சில புஸ்தகங்களையும் குறைந்த விலைக்கு மாத்வ மித்திரன் பழைய வாலியங்களையும் பல பிரசுரங்களையும் பெறலாம். [ப-ர்.



ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

# ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(பதினேழாவது அத்யாயம்.)

(காபிரைட்) முன் தொடர்ச்சி.

(ஸ்ரீம.வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழி பெயர்ப்பு.)

---

அப்படி ஒருவருஷம் முடியவும் பரமசிவனின் தர்சனமாயிற்று. சிவனிடமிருந்து கிருஷ்ணனைக் கொல்லக்கூடிய மகனை வரமாய்ப் பெற்றார். அந்த கர்க்க முனிவர் விஷ்ணுவிடம், அவர் தேவதை என்று புத்தியுள்ளவராயினும், க்ரூரர்களான அஸுரர்களால் பிரவேசமடைந்தவராய் கிருஷ்ணனுக்கு விரோதமான காரியத்தைச் செய்தார். ஸ்திரமான அவருடைய ப்ரம்மசரிய விரதத்தை விட்டொழித்தார். அச்சமயம் அஸுரர்களைச்சேர்ந்த ஓர் க்ரூர அப்ஸரஸ்திரீ, கோபிகளின் கூட்டங்களின் நடுவில் பிரவேசித்து, அவளுக்கு பலிஷ்டனான ஓர் மகன் பிறக்கவேண்டுமென்று ஆசைகொண்டு கர்க்காசாரியாரிடம் வந்துசேர்ந்தாள். கர்க்கமுனிவரின் மனதில் எண்ணியிருந்ததை அறிந்துகொண்டு, மகனில்லாதவனான யவனராஜன், கோபிகள் மூலமாய் கர்க்காசாரியாரை ஆராதித்து வந்தான். கோபத்தால் அவிவேகமடைந்தவரான அந்த கர்க்க முனிவர் கோபியாய் வந்த அப்ஸரஸ்ஸிடம் மகனை உண்டாக்கி யவனராஜனிடம் கொடுத்தார். பகவத் த்வேஷியான அசுரனின் ஆவேசங் கொண்ட கர்க்கமுனிவர் இந்த கிருஷ்ணனுக்கு விரோதம் செய்தது என்ன ஆச்சரியம். நைஷ்டிக ப்ரம்ம சரியத்தினின்றும் தவறியவராய் கிருஷ்ணனுக்கு விரோதம் செய்தவரான கர்க்கமுனிவர் பிறகு பச்சாத்தாபம் அடைந்தார். பிறகு தன் புத்தியை நொந்து கொண்டார். ஹே கிருஷ்ணா! மகா பாபியான என்னை ஸம்ரக்ஷிப்பாய் என்று கூறிக்கொண்டு கிருஷ்ணனை சரணமடைந்தார். கிருஷ்ணனின் ஆக்ஞையின் பேரில் விஷ்ணுவை தேவதையாகக்கொண்ட தவத்தைச்செய்தார். ஸதாசிவனை பூஜிக்கும் பாக்யம் கர்க்கமுனிவருக்கு எப்படி கிடைக்கும்.

ஜராஸந்தா! உங்களைப்போலொத்த தானவர்கள் பரமசிவனுடைய பூஜையில் ஸ்திரமாயிருப்பார்கள். அத்த கர்க்கமுனிவருக்கு குழந்தை எப்பொழுது பிறக்குமென்று காலத்தை எப்பொழுதும் அந்த யவனராஜன் எதிர் பார்த்துக்கொண்டு குழந்தை பிறந்தவுடன் அவனுக்கு பட்டாபிஷேகம் செய்ததன்நிமித்தம் காலனென்ற நாமதேயம் பெற்றவனான மகன் கிருஷ்ணனைக் கொல்ல கர்க்கருக்கு பிறந்தான். இந்த காலயவனன் பரமசிவனிடம் பக்தி யுள்ளவன். ஏராளமான சைனியத்துடன் கூடி யிருக்கிறான். எப்பொழுதும் பலத்தால் கர்விஷ்டன். உனக்கே சிஷ்யன். ஆகையால் ஜராஸந்தனே! உன்னுடைய ஆக்ஞையின் பேரில் அவனிடம் செல்கிறேன். சீக்கிரமே அவனை உன் ஸமீபத்தில் அழைத்துக்கொண்டு வந்து அவனால் பூலோகத்தை கிருஷ்ணனில்லாததாய்ச் செய்து ஸந்தோஷமடைவோம். பிறகு நாம் ருக்மணியை சிசுபாலனுக்கு கொடுக்கச் செய்வோம். தேவர்களின் கக்ஷியைச்சேர்ந்த ராஜர்களை நாசம் செய்து இஷ்டப்படி நாம் இருப்போம். என்றிவ்வாறு ஸால்வராஜன்சொன்னதைக்கேட்ட ஜராஸந்தன் மிக்க துக்கமடைந்த மனமுடையவனானான். கிரீடத்தால் அலங்காரம் செய்யப்பட்டிருந்த அவனுடையதலையை விரைவாய் குனிந்துகொண்டான். கையைப் பிசைந்துகொண்டு தன்னுடைய புஜங்களை நோக்கிக்கொண்டு ஜராஸந்தன் இவ்வாறு பேசினான். என் காரியம் நடைபெற அன்னிய புருஷனை எப்படியாசிப்பேன். பூமியிலுள்ள எல்லா அரசர்கள் என் பாஹுவை ஆசிரயித்துக்கொண்டு அஸாத்யமான அநேக காரியங்களை அடைந்திருக்கின்றனர். அப்பேர்ப்பட்ட சக்திபடைத்தவன் ஜராஸந்தன் நான். ஸமஸ்த ராஜர்களுக்கும் யஜமானனான நான் பரமசிவனின் சரணத்தைக் கைபிடித்திருக்கும்பொழுது எப்பொழுதும் நான் செய்யாதிருந்ததான இதரர்களை யாசிப்பதாயுள்ள காரியத்தை இப்பொழுது எப்படி செய்வேன். இப்படி ஜராஸந்தனால் சொல்லப்பட்ட ஸால்வராஜன் பரிகாசமாக மேல்வார்த்தையாடினான். ஹே ப்ரபுவான ஜராஸந்தா! நீங்களும்தான மோகமடைவது. அப்படியானால் எங்களைப் போன்றவர்கள் மோகமடைவது ஆச்சரிய மில்லைதான். தன்னுடைய சிஷ்யர்கள் செய்தகாரியம் அன்னியர்கள் செய்ததாய் ஆகுமா? அரசர்கள் தங்கள் சிஷ்யர்கள்



தங்கள் சேவகர்கள் இவர்களின் சமூகங்களைக்கொண்டு காரியத்தை நிறவேற்றிக்கொள்ளுகின்றனர். எங்களைப்போன்றவர்கள் உங்கள் பலத்தின் ஆசிரயத்தால் ப்ரவிருத்தித்து வருகின்றோம். ஓர் புருஷன் மரத்தைவெட்ட கோடாலியைக் கைக்கொள்வதால் அவன் ஸாமர்த்தியமில்லாதவனென அறியப்படுகிறானா என்ன? யவனராஜனான காலயவனன் உங்களுக்கு கோடாலியைப்போலாவான். உங்கள் பலத்தாலன்றி இந்த கிருஷ்ணவதத்தைத்தவிற வேறு எந்த காரியத்திலும் அவன் சக்தனல்ல. அந்த காலயவனனுக்கு கிருஷ்ணனைக் கொல்லும் விஷயத்தில் மட்டில் சிவனால் வரனேற்பட்டிருக்கிறது. கிருஷ்ணனைத்தவிற வேறு சத்ருவின் சங்கடத்தினின்றும் காலயவனனை நீங்கள்தான் அவனை ஸம்ரக்ஷிப்பவர். உங்களுக்கு சிவனுடைய ப்ரஸாதத்தால் எல்லோராலும் ஜயிக்கமுடியாத தன்மை ஏற்பட்டிருக்கிறது. அந்த காலயவனனுக்கு கிருஷ்ணனை ஜயிப்பதில் விசேஷமாய் சிவனுடைய வரனிருந்துவருவதால் நாம் காலயவனனைத் தேடுகிறோம். என்று ஸால்வராஜன் எவ்வளவு சொல்லியும் ஜராஸந்தன் திருப்தியில்லாதவனாகவே இருந்தான். அப்பொழுது ஸால்வராஜன் ஸௌப விமானத்திலேறிக்கொண்டு காலயவனனிடம் சென்றான். பிறகு அந்த காலயவனன் ஜராஸந்தனிடமிருந்து ஸால்வராஜன் வந்திருப்பதாய் கேட்டு பக்திபூர்வமாய் நமஸ்காரம் செய்து சீக்கிரமே பூஜித்தான். கிருஷ்ணத்வேஷிகளான எல்லோருக்குமே தேவதானுக்ரஹகத்திற்கு த்வாரபூதமானகுரு என்று காலயவனன் தெரிந்துகொண்டு ஜராஸந்தன் இருந்த திக்குக்கு நமஸ்காரம் செய்து ஜராஸந்தனின் தூதனான ஸால்வராஜனை சீக்கிரம் பூஜித்தான். ஸால்வராஜன் சொன்ன வார்த்தையைக்கேட்டு காலயவனன் மூன்றுகோடி அக்ஷௌஹிணியுள்ள யவனர்களின் சைனியத்துடன் சீக்கிரமே மதுராநகருக்கு யுத்தத்திற்கு புறப்பட்டான். காலயவனனுடைய சைனியத்திலுள்ள குதிரைகளின் மூத்திரம் விஷ்டை இவைகளினின்றும் வேகமாய் பெருகும் சகிருத் என்ற ஓர் நதி கிளம்பியது. அந்த நதி கலியுகத்தில் வேகமாய் பெருகப்போகிறது. அந்த சகிருத் என்ற நதியினின்றும் அடிக்கடி அந்தந்ததேசம் பாழடைவதை வாயுபகவான் பார்த்து

அந்த ஆற்றின் வெள்ளம் பெருகாத இடத்திலிருந்த சைனியங்களின் மூத்திரத்தை தன் காற்றால் உலர்த்திவந்தார். கருடபகவானோடு கூடிய ஸ்ரீகிருஷ்ணர் பலராமருடன்கூடி அவர் எப்பொழுதும் அத்யந்தம் பூர்ணமான ஞானமுள்ளவராயினும் விசாரம் செய்து லீலார்த்தமாய் இவ்வாறு எண்ணினார். யுத்தம் செய்ய இச்சைகொண்டவனாய் காலயவனன் எங்களருகில் வந்திருக்கிறான்: நாங்களும் அவனுடன் யுத்தம் செய்யப்ரியப்பட்டால் ஜராஸந்தன் யுத்தத்திற்கு வரப்போகிறான். அந்த ஜராஸந்தன் பூர்வம் எங்களால் பராஜயமடைந்த கோபத்தால் யாதவர்களைக் கொல்லப்போகிறான். முன்பு நடந்த யுத்தங்களில் என்னை ஜயிக்கக்கூடுமென்ற ஆசையின்பேரில் யாதவர்களை அவன் கொல்லாமலிருந்தான். தற்போது என்னை ஜயிப்பதில் அவனுடைய ஆசை அற்றுப்போயிருப்பதால் அவன் யாதவர்களைக்கொல்வான். ஆகையால் சமுத்திரமத்தியில் ஓர் பட்டணத்தை நிர்மானம் செய்து அதில் எல்லா யாதவர்களையும் ஸ்தாபிக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன். என்றிவ்வாறு ஸ்ரீகிருஷ்ணர் சொல்லி மகேந்திரனின் தச்சனான விச்வகர்மாவை ஸ்மரித்தார். புவனனென்பவனின் குமாரனான விச்வகர்மா அப்பொழுது அங்குவந்து த்வாரகை என்ற நகரத்தை நிர்மாணம் செய்தான். ஸ்ரீகிருஷ்ணரின் ஆக்கையின்பேரில் ஸமுத்திரம் தன் ஜலத்தை ஒதுக்கிக் கொண்டு பூமியைத் தந்திட அந்தப் பிரகாரம்போலுள்ள ஜல ஸமூக மத்தியில் பன்னிரண்டு யோஜனை விஸ்தீரணமாயுள்ளதும் க்ஷீரஸமுத்திலிருந்துவரும் சுவேதத்வீபத்திற்கு ஸமமாயுள்ளதுமான சிரேஷ்டமான பட்டணத்தை விச்வகர்மாவைக் கொண்டு ஸ்ரீகிருஷ்ணர் நிர்மாணம் செய்தார். ஸ்ரீகிருஷ்ணர் அந்த லவண ஸமுத்திரத்தின் நீரை அமிர்தத்திற்குஸமானமாய்ச் செய்தார். வாயுபகவான் ஸ்ரீகிருஷ்ணருக்கு ஸுதர்மை என்ற தேவஸபையை கொண்டு வந்து கொடுத்து குபேரனிடமிருந்த எல்லா நிதிகளையும் ஸமர்பித்து ப்ரபுவான கிருஷ்ணரை நமஸ்கரித்துச் சென்றார். எல்லாதேவ ஸமூகங்களும் அவர்களுக்கிருந்த விசேஷமானபொருள்களை ஸ்ரீகிருஷ்ணருக்கு ஸமர்ப்பணம் செய்தனர்.

(தொடரும்.)



# கும்பகோணத்தின் மகாத்மியம்

பவிஷ்யோத்தர புராணம் மத்யாம்சம் க்ஷேத்திர கண்டத்தில் இதன் மகாத்மியம் அறுபத்திநான்கு அத்யாயங்களால் கூறப்படுகிறது. மேலும் சேஷதர்மம் ஆக்னேயபுராம் துலாகாவேரி மகாத்மியம் முதலிய பல புராணங்களிலும், இது புண்ய க்ஷேத்திரமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. காசி க்ஷேத்திரத்திற்கு சுற்றிலும் பஞ்சக்ரோச க்ஷேத்ரங்கள் இருப்பதுபோல் கும்பகோணத்தைச்சுற்றி, பஞ்சக்ரோச க்ஷேத்ரங்களிருக்கின்றன. யாத்ரீகர்கள் அந்த பஞ்சக்ரோச யாத்திரை செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. கயா க்ஷேத்திரத்திற்கு அஷ்டாதச பதங்களிருப்பதுபோல் இந்த க்ஷேத்திரத்தின் சுற்றிலும் அஷ்டாதச க்ஷேத்திரங்களிருக்கின்றன. இது காசியைவிட நூறுமடங்கு அதிகமான பலனைத்தருவதாய் ஸ்பஷ்டவசனங்கள் காணப்படுகின்றன. இதர க்ஷேத்ரங்களில் செய்த பாபம் புண்ய க்ஷேத்திரங்களுக்குச் சென்றால் அங்கு தொலைகிறதென்றும், புண்யக்ஷேத்ரங்களில் செய்த பாபம் காசியில் தொலைகிறதென்றும் காசியில் செய்த பாபம் கும்பகோணத்தில் தொலைகிறதென்றும் கும்பகோணத்தில் செய்த பாபம் கும்பகோணத்திலேயே தொலைகிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. "அன்யக்ஷேத்ரே கிருதம் பாபம் புண்யக்ஷேத்ரே விநச்யதி| புண்யக்ஷேத்ரே கிருதம் பாபம் வாராணஸ்யாம் விநச்யதி| வாராணஸ்யாம் கிருதம் பாபம் கும்பகோணே விநச்யதி| கும்பகோணே கிருதம் பாபம் கும்பகோணே விநச்யதி" என்பது பிரஸித்தமான பிரமாணம். இந்த க்ஷேத்திரத்திலுள்ள மகாமகஸரோவரமென்னும் கன்யாதீர்த்தத்தின் சுற்றிலும் நவக்யா தீர்த்தம், இந்திரதீர்த்தம், அக்னி தீர்த்தம், யமதீர்த்தம், நிர்ருதி தீர்த்தம், வருண தீர்த்தம், வாயு தீர்த்தம், ப்ரம்ம தீர்த்தம், கு[illegible]தம், ஈசான தீர்த்தம், [illegible]

பயோஷ்ணீ, ஸரயூ இந்த ஒன்பது மகா நதிகள் தங்களிடம் பாபிகள் ஸ்நானம் செய்துவிட்டுப்போயிருந்த இங்குள்ள கன்யாதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பாபங்களைப் போக்கிக்கொள்ளுகின்றன. இவர்களின் கோயில்களிருக்கின்றன. பன்னிரண்டு வருஷத்திற்கொருமுறை இங்கு மகாமகமென்று கொண்டாடப்படுகிறது. அச்சமயம் இந்த நதிகள் ப்ரத்யக்ஷமாய் இங்கு வருவதாயும், சதுர்முகன் இங்குள்ள எல்லா விஷ்ணு மூர்த்திகளுக்கும், சிவமூர்த்திகளுக்கும் உற்சவம் நடத்துவதாயும் புராணங்கள் அறிவிக்கின்றன. குரு சிம்ஹராசியில் இருக்கும்பொழுது, சூர்யன் கும்பராசியில் வரும் கும்பமாஸத்தில் பௌர்ணிமை மகா நக்ஷத்திரத்தில், விருஷபலக்னத்தில் கங்காதிநதிகள் இங்கு வருகின்றனர். அச்சமயம் மகாமகஸ்நானம் மகா பலனைத் தரக்கூடியது. இந்த க்ஷேத்திரத்திற்கு கும்பகோணம் (திருக்குடந்தை) என்று பெயர் வந்ததற்கு காரணம். சதுர்முகனின் ஒருநாள் முடிந்து ப்ரளயமேற்படுமுன், சதுர்முகன் நாராயணரிடம் சென்று தன்னிடம் தங்கிருந்த சிருஷ்டி பீஜத்தை அந்த ப்ரளயத்தில் எப்படி சம்ரக்ஷிப்பதென்று தேவர்களுடன் பிரார்த்திக்க, பகவான் அமிருதத்தை தெளித்து, மண்ணால் ஓர் கும்பத்தைச்செய்து, அதன் நடுவில் சிருஷ்டி பீஜத்தைவைத்து, சகல வேதங்கள், சாஸ்திரங்கள் இதிஹாஸங்கள், புராணங்கள், ஸ்மிருதிகள் முதலியவைகளையும், அமிருதத்தையும் அதில் நிரப்பி, அந்த கும்பத்தை மூடி, அதன்மீது தர்பகூர்சம் வைத்து, ஸூதாகல வஸ்திரம், பிரம்ம ஸூத்ரம், முதலியவைகளால் அதை அலங்கரித்து மேருபர்வதத்தின் சிகரத்தின் மீதுள்ள சதுர்முகன் விட்டு அங்கணத்தில், தர்பமயமான சிம்மாட்டின்மீது வைத்துவிடும்படி ஆக்ஞாபித்தார். சதுர்முகன் அவ்வாறே செய்ய, ப்ரளயோதகம் உலகத்தை வியாபிக்க, அந்த உதகத்தில் அந்த அமிருத கடம் மேரு பர்வதத்திலிருந்து மிதந்துகொண்டுவந்து கும்பகோணத்திற்குப் பக்கத்திலுள்ள ஸாக்ஷிபுரமென்னும் (திருப்பிரம்மியம்) சமீபத்தில் மிதந்துவரும்பொழுது அதன்மீதுள்ள கூர்சம் விழுந்துபோனதாயும், அந்த உதகத்தில் ப்ராதுர்பவித்த ஸப்த கன்னிகைகள் அந்த அமிருத கடத்தை ஸம்ரக்ஷித்துவந்ததாயும், பிறகு அந்த கும்பம்



முன்னே மிதந்து போகும்பொழுது கிராதரூபியாய் பரமசிவன் பல வேடர்களுடன் வந்து அந்த கும்பத்தை அநேக பாணங்களைப்போட்டு சேதிக்கப்பார்த்தும் அதை சேதிக்கமுடியாமல் போக மகா வீரியங்கொண்டு திவ்யமான ஓர் பாணத்தால் சேதித்தாரென்றும், அந்த கும்பத்தின் கோணப்ரதேசம் உடைந்து உள்ளிருந்த அமிருதம் பஞ்சக்ரோச தூரம் பெருகியதென்றும், பிறகு அந்த கிராத ரூபி பகவான் மணலையும் மண்ணையும் சேர்த்து ஓர் அழகான லிங்கம் செய்து அதை பூஜித்து வந்து, அதில் தானே ப்ரவேசித்தாரென்றும் அவர்தான் ஆதி கும்பேசுவரர் எனப் பெயர்கொண்டவராய் கும்பகோணமென்று இந்த க்ஷேத்திரத்திற்கு பெயரளிக்கக் காரணமானாரென்றும் சொல்லப்படுகிறது. கும்பகோணத்திற்கு சுற்றிலும் அமிருதப்ரவாகம் பெருகிய பஞ்சக்ரோச க்ஷேத்திரங்களாவன. (1) மத்யார்ஜுனம் (திருவிடைமருதூர்) (2) சம்பகாரண்யம் (திருநாகேசுவரம்) (3) ருத்ராக்ஷாரண்யம் (தாராசுரம்) (4) குஹாசலம் (ஸ்வாமிமலை) (5) பாடலீவனம் (கருப்பூர்).

1. மத்யார்ஜுனம் (திருவிடைமருதூர்) இது கும்பகோணத்திலிருந்து கிழக்கே மாயவரம் போகும் மோட்டார் ரஸ்தாவிலிருக்கிறது. இது ரயில்வே ஸ்டேஷனுமாகும். இங்கு பிருஹத்குசாம்பாள் ஸமேத மகாலிங்கேசுவரர் விளங்குகிறார். விபண்டக மகாமுனி அர்த்தநாரீசுவரரான பரமசிவனை தரிசிக்க 24 சதுர்யுகம் தவம் செய்ததால் இவர் ஆவிர்பவித்தார். காவேரியில் கல்யாண தீர்த்தத்தில் புஷ்யபௌர்ணமி புஷ்ய நக்ஷத்திரத்தில் ஸ்நானம் விசேஷம். மகாலிங்கேசுவரரின் எதிரிலுள்ள காருண்யாமிருத தீர்த்தத்தில் மேஷஸங்க்ரமணத்திலும் வாயவ்யத்தில் ரோமசருக்கு ஞானத்தைத்தந்த காகஹேமாங்கத தீர்த்தத்தில் வைசாக பௌர்ணமியிலும் ஸ்நானம் விசேஷ பலனைத்தரும். இந்த க்ஷேத்திரத்தில் கச்யபர் பாலகிருஷ்ணனை தரிசிக்க 12 யுகம் தவம்செய்ய பகவான் ஸ்ரீபாலகிருஷ்ணன் தவழ்ந்துகொண்டு நிர்வாணமூர்த்தராய் இடுப்பில் கட்டிய உரலுடன் அர்ஜுன விருக்ஷத்தின்மூலத்தில் ஆவிர்பவித்தார். அந்த அர்ஜுன விருக்ஷம் மற்ற [illegible]

விருக்ஷங்களின் நடுவில் உயர்ந்து வளர்ந்திருந்ததால் இதுமத்யார்ஜுனமென்று ப்ரசித்தமாயிற்று. பஞ்சக்ரோச யாத்ரை செய்பவர்கள் முதலில் இந்த க்ஷேத்ரத்தை தரிசிக்கவேண்டும். இங்கு தைப்பூசத்தில் ஏராளமான கூட்டம்கூடுகிறது.

2. சம்பகாரண்யம் (திருநாகேசுவரம்) இது கும்பகோணத்திற்கு ஆக்னேயத்திலிருக்கிறது. ரயில்வேஸ்டேஷனுமுண்டு. இங்கு ஆதிசேஷன் பரமசிவனுக்கு ஆபரணமாகவும், ஞான பக்தியாதிகள் விருத்தியாகவும், பரமசிவனைக்குறித்து நூறு வருஷம் தவம்செய்து அவருடைய அபீஷ்டத்தைப் பெற்றார். சம்பக விருக்ஷத்தை ஸ்தாபித்து, அழகான தீர்த்தத்தையும் பல மண்டபங்களையும் கட்டினார். கிரிகுசாம்பா ஸமேதரான இந்த நாகேசுவரரை தக்ஷகனும் சூரியனும் பூஜித்து அவர்களின் அபீஷ்டத்தை அடைந்திருக்கின்றனர். அந்த தீர்த்தம் நாகதீர்த்தமென்றும் சூர்ய தீர்த்தமென்றும் சொல்லப்படும். விருச்சிகமாஸம் பானுவாரத்தில் இங்கு ஸ்நான விசேஷம். மூன்று தடவை நாகரென்ற ரிஷி இவரை ஆராதித்ததால் இந்த க்ஷேத்திரத்திற்கு த்ரிநாகேசுவரமென்று பெயர். இதன் வெகு சமீபத்தில் ஆகாசநகரமென்றும் துளஸீவனமென்றும் சொல்லப்படும். ஸ்ரீவெங்கடேசரின் மகா க்ஷேத்திரமிருக்கிறது. இங்கு மார்க்கண்டேய மகாமுனி பகவானை மாப்பிள்ளையாகச் செய்துகொள்ள உப்பில்லாமல் கந்தமூல சாகங்களை புஜித்துக்கொண்டு ஆயிரம் வருஷம் தவம்செய்தார். ஸ்ரீ ஹரியின் ஆக்ஞையின்பேரில் பூதேவி ஓர் குழந்தையாய் துளஸீ மூலத்தில் மார்க்கண்டேயருக்கு கிடைத்து அவரிடம் அருமையாய் வளர்ந்துவர, அவளை விவாகம் செய்துகொள்ள பகவான் வெங்கடேசன் விருத்த ப்ராம்மணரூபியாய் கபம் நிறைந்த வதனத்துடன் வந்துசேர, பூதேவி அவரை விவாகம் செய்துகொள்ள இச்சைப்படாமற்போக, வந்த அதிதியின் அபீஷ்டத்தை பூர்த்தி செய்ய முடியாமற்போகிறதே என்று மார்க்கண்டேயர் ஸ்ரீஹரியை மகாஸ்தோத்திரம் செய்ய, பகவான் தன் நிஜரூபத்தைக்காட்டி அவளை விவாகம்செய்துகொண்டு மார்க்கண்டேயரின் இஷ்டப்படி சமையலுக்கு உப்பு போடத்தெரியாத அந்த தேவியாரால் உப்



பில்லாமலேயே நிவேதனத்தை ஸ்வீகரிப்பதாய் ஒப்புக்கொண்டு உப்பிலியப்பன் அலவண வெங்கடேசன் எனப் பெயர்கொண்டவராய் விளங்கிவருகிறார். ஓர் நாளிலேயே அபீஷ்டஸித்தியைத்தருவதால் அஹோராத்ரமென்ற தீர்த்தம் அங்கு இருந்துவருகிறது. பிரதி சிரவணமும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் பகவானை தரிசித்து வருகின்றனர்.

3. ருத்ராக்ஷாரண்யம் (தாராசுரம்) இது கும்பகோணம் நகரத்திற்குள்ளேயே நிர்ருதி திக்கில் தஞ்சாவூர் போகும் மோட்டார் மார்க்கத்திலிருக்கிறது. ரயில்வேஸ்டேஷனுமுண்டு. இங்கு பரமசிவன் சுயம் ருத்ராக்ஷமரத்தைவைத்து பயிர்செய்தார். முனியை சூலத்திலேற்றி சங்கடப்படுத்தியதால் யமனுக்கு பகவான் அளித்த சங்கடத்தை, இந்த க்ஷேத்திரத்தில் ருத்ராக்ஷ விருக்ஷத்தினடியில் பத்தாயிரம் வருஷம் அவர் கோரமான தவம்செய்து அதை நிவிருத்தி செய்துகொண்டார். யமதீர்த்தமென்று புண்யகரமான ஓர் தீர்த்தத்தை நிர்மாணம் செய்து பரமசிவனுக்கு மகோற்சவம் நடத்தினார். இந்த தீர்த்தத்தில் சிம்ஹமாஸம் அமாவாசையில் ஸ்நானம் செய்தால் கங்காஸ்நான பலனென்று சொல்லப்பட்டிருக்கிறது. சூரசேனன் இங்கு அன்னதானம் செய்ய பதினாயிரம் ப்ரம்மஹத்யைகள் விலகின. யக்ஞரென்ற ப்ராம்மணருக்கு அபஸ்மாரரோகம் இதில் ஸ்நானம் செய்து விலகியது. மகேந்திரனின் ஐராவதத்திற்கு ரிஷிசாபத்தால் நீலவர்ணமுண்டாகி, ஸிம்ஹமாஸம் அமாவாசையில் இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பரமசிவனை பூஜித்ததின்பேரில் முன்போல் சுவேதவர்ணம் வந்தது. அதனால் ஐராவதேசுவரமென்று அங்குள்ள சிவமூர்த்திக்கு பெயர் வந்தது. அம்பாள் பெயர் தேவநாயகி. தா[illegible]னென்ற ஓர் அஸுரோத்தமன் அவர்களின் கூட்டத்தார்களுடன் சுக்ராசாரியாரிடமிருந்து உபதேசம் பெற்று இந்த ஐராவதேசுவரனை பூஜித்து ஸத்கதி பெற்றானதலால் இவ்வூருக்கு [illegible]மென்று பெயர்வந்தது.

லிருக்கிறது. இதற்கு ரயில்வேஸ்டேஷனுமுண்டு. இது சுப்ரமண்யருடைய மகாக்ஷேத்ரங்களிலொன்றாகும். ப்ரம்மஹத்யாதி பாபங்களை நிவிருத்தி செய்யக்கூடியது. ஒருதரம் தரிசித்தாலேயே ஜனங்கள் பரிசுத்தமாவார்கள். பரமசிவன் எல்லோருக்கும் ஞானப்ரதனாய் குருராஜனாய் இருந்தபோதிலும் இந்த க்ஷேத்திரத்திற்கு மகாமகிமையை அளித்திடவும், எல்லா வேத மந்தரங்களுக்கும் சிரேஷ்டமான ப்ரணவத்தை ஷண்முகன் நன்கு அறிவாரென்பதை உலகில் ப்ரசித்தி செய்யவும், தன் மகனை ஸுப்ரமண்யரிடமிருந்து அந்த ப்ரணவத்தை இங்கு உபதேசம் பெற்றார். ஸுப்ரமண்யரின் உபதேச ஸ்தலமான இந்த க்ஷேத்திரத்தில் கிருத்திகா நக்ஷத்திரத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடுகின்றனர். ஸுப்ரமண்யர் இருக்கும் இந்த ஸ்வாமிமலைக்கு அறுபது வருஷங்கள் படிக்கட்டுகளாகவும், ஆறுருதுக்கள் கோபுரங்களாகவும், தேவஸ்திரீகள் பிரகாரங்களாகவும், வாசல்களாவுமிருக்கின்றனர். அங்கப்ரதக்ஷிணம், அபீஷ்ட சித்தி குஹாசலத்திற்கு பூர்வத்தில் குமாரதீர்த்தமும், ஸன்னதியில் குஹதீர்த்தமுமிருக்கின்றன. கார்த்திக பௌர்ணமியில் ஸ்நானம் விசேஷம். ஹேஹயராஜன் சிவத்ரோகம்செய்து வாதரோகமடைந்து இங்கு ஸ்நானம்செய்து ஷண்முகனை தரிசித்ததால் அது நிவிருத்தியாகி கார்த்தவீரியார்ஜுனனைப் பெற்றான். இங்கு ப்ரார்த்தனைகள் விசேஷமாய் நடந்துவருகின்றன. அசலானந்தமென்று அவருடைய விமானத்தின் பெயர்.

5. பாடலாரண்யம் (கருப்பூர்) இது கும்பகோணத்திற்கு வடகிழக்கில் அணக்கரை போகும் மோட்டார் ரஸ்தாவிலிருக்கிறது. அபிராமாம்பாள் ஸமேத ஸ்ரீஸுந்தரேச்வரர் இங்கு விளங்குகிறார். பௌண்டரீகம் செய்த பலன் அவரை தரிசிப்பதாலுண்டாகும். அகஸ்தியர், வாலகில்யாதி மகரிஷிகள், குபேரன், ஸோமகேதுராஜன், பகீரதன் முதலிய மகாராஜர்கள் இவரை ஆராதித்திருக்கின்றனர். சைத்ர பௌர்ணமியில் அங்கு ப்ரம்மதீர்த்தத்தில் ஸ்நானவிசேஷம். அதன் தக்ஷிணத்தில் புன்னாகவனமுண்டு. அங்கு ஸ்ரீதேவி பூதேவிஸமேதராய் காலவருக்கு அபீஷ்



டத்தைத்தந்த ஸ்ரீவெங்கடேச மூர்த்தி இருந்துவருகிறார். ஆக இந்த பஞ்சக்ரோச யாத்திரையை கிரமமாய் கும்பகோண யாத்ரை செய்பவர்கள் அவசியம் செய்து முடிக்கவேண்டியது. ஒரே நாளில் உபவாஸமாயிருந்து இந்த பஞ்சக்ரோச யாத்ரை செய்வது ஸர்வோத்தமம். கும்பகோணத்திற்கு அடுத்தாப்போலுள்ள ப்ரதமாவரணம் இந்த பஞ்சக்ரோசம். இந்த யாத்ரையை செய்துகொண்டு இரண்டாவது ஆவரணமாகிய அஷ்டாதசஸ்தான யாத்ரை செய்யவேண்டியது.

அந்த அஷ்டாதசஸ்தானங்களாவன:— 1. மத்யார்ஜுனம் (திருவிடைமருதூர்) மேலே சொல்லப்பட்டிருக்கிறது. 2. த்ரிபுவனம்: இது மத்யார்ஜுனத்திற்கு முக்கால்மைல் தூரத்திலிருக்கிறது. இங்கு தர்மஸம்வர்தனிஸமேத கம்பகரேசுவரர் த்ரிபுராசூரர்களைக்கண்டு தேவர்களுக்கு நடுக்கமுண்டாக இவர் அதை நிவிருத்தி செய்தார். இங்கு கற்பூர விருக்ஷத்தினடியில் தேவர்களால் ஸுரதீர்த்தமென்று நிர்மாணம் செய்யப்பட்டிருக்கிறது. இங்கு வைசாக பௌர்ணமியில் ஸ்நானம் விசேஷம். 3. தர்பாரண்யம் அல்லது பைரவக்ஷேத்திரம் (அம்மாசத்திரம்) இது திருபுவனத்திலிருந்து முக்கால்மைல்தூரத்தில் மாயவரம் போகும் ரஸ்தாவிலிருக்கிறது. கும்பகோண க்ஷேத்திரத்தை ஸம்ரக்ஷிக்க எட்டு பைரவ ரூபியாய் பைரவர் இங்கு அஷ்டதிக்கிலிருக்கிறார். ஞானாம்பிகாஸமேத பைரவேசர் என்று பரமசிவனின் நாமம். தேவி தீர்த்தம். இங்கு கும்பமாஸத்தில் ஸ்நான விசேஷம். 4. த்ரிநாகேசுவரம் மேலே சொல்லப்பட்டிருக்கிறது. அம்மாசத்திரத்திலிருந்து இது 1¼ மைல் தூரமிருக்கிறது. 5. ரக்தகதலீவனம் (செவ்வரம்பை) அய்யாவாடி, இது திருநாகேசுவரத்திலிருந்து 1¼ மைலிலிருக்கிறது. ஆனந்ததாயினிதேவிஸமேத கதலீவனேசுவரரென்று நாமம். காமததீர்த்தம். 6. கண்வபுரம் (சிவபுரம்) பிருஹந்நாயகிஸமேத பிரம்மபுரேசரென்று நாமம். கண்வதீர்த்தம். 7. பிறகுப்ரதக்ஷிணமாக லாங்கலாரண்யம் (சாக்கோட்டை) வரவேண்டும். இது செவ்வரம்பையிலிருந்து 1¼ மைலிருக்கிறது. அங்கு யோகாம்பிகாஸமேத ஸுதாகடேசுவரர், கலிப்பருக்கு

(அமிருதா நல்லூர்) இதுசாக்கோட்டைக்கு $1\frac{1}{4}$ மைலிலிருக்கிறது. அமிருதவல்லிஸமேத ஸோமேசுவரர். ஸோமதீர்த்தம். 9. பஞ்சாக்ஷரபுரம் (பட்டீசுவரம்) இது கும்பகோணத்திற்கு ஆக்னேயத்தில் 3 மைலிலிருக்கிறது. ஞானம்பிகாஸமேத தேனுபுரீசுவரரென்று ஈசுவரனுக்கு நாமம். பக்ஷிதீர்த்தம். 10. த்ரிசக்திபுரம் (திருச்சத்திமுத்தம்) இது பட்டீசுவரத்திலிருந்து $\frac{1}{2}$ மைலிலிருக்கிறது. பிருஹந்நாயகிஸமேத சக்திவனேசுவரரென்று ஈசுவரனின் நாமதேயம். சக்திதீர்த்தம். 11. ருத்ராக்ஷாரண்யம் தாராசுரம்) மேலே சொல்லப்பட்டிருக்கிறது. 12. தக்ஷிணாவர்த்தஸம்ஸ்தானம் (திருவலஞ்சுழி) இது தாராசுரத்திலிருந்து ஒரு மைலிருக்கிறது. இங்கு சுவேதவினாயகர். ஆவர்த்ததீர்த்தம். 13. ஆஹாசலம் (சுவாமிமலை) மேலே சொல்லப்பட்டிருக்கிறது. 14. இனபுரம் (இன்னம்பூர்) சுவாமிமலையிலிருந்து $2\frac{1}{2}$ மைலிலிருக்கிறது. திவாநாதேசுவரர். சூர்யதீர்த்தம். 15. ஸாக்ஷிபுரம் (திருப்பிரம்பியம்) இது இன்னம்பூரிலிந்து முக்கால்மைலிலிருக்கிறது. ப்ரளயத்தில் வந்த அமிருதகடத்தின் மீதிருந்த கூர்சம் இங்குசமீவிருக்ஷமாய் வளர்ந்திருக்கிறது. அதை ஸம்ரக்ஷித்த கன்னிகைகளிருக்கின்றனர். இவர்களை நான்கு தடவை நமஸ்கரிக்கவேண்டும். ஸாக்ஷிநாதர். ஸூதாபிந்து தீர்த்தம். 16. கோடிபுரம் (கொட்டையூர்) இது திருப்பிரம்பியத்திலிருந்து 4 மைலிலிருக்கிறது. இங்கு கந்துக க்ரீடாம்பிகாஸமேத கோடீசுவரர். அமிருததீர்த்தம். 17. பாடலீவனம் (கருப்பூர்) இது கொட்டையூரிலிருந்து 4 மைலிலிருக்கிறது. மேலே சொல்லப்பட்டிருக்கிறது. 18. பாதராயணபுரி (வாணாதுரை) இது கும்பகோணத்திலேயே பூர்வபாகத்திலிருக்கிறது. இங்கு ஸோமகலாம்பாஸமேத பாணபுரீசுவரர். வியாஸதீர்த்தம். இந்த க்ஷேத்திரங்களிலுள்ள புண்ய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து பகவன் மூர்த்திகளை தரிசித்து ஜபம், தானம், ச்ராத்தம் முதலியவைகளைச் செய்து கும்பகோண க்ஷேத்திரத்தை மேற்கண்ட கிரமப்படி பிரதக்ஷிணம் வந்து கும்பகோணத்திற்குள் பிரவேசித்து ஆதி கும்பேசுவரரை தரிசித்து இந்த அஷ்டாதசஸ்தான யாத்திரையை முடித்து ஸ்ரீசாரங்கபாணியை நமஸ்கரித்து அவரிடம் இந்த யாத்ரா பலனை ஸமர்ப்பிக்கவேண்டும்.

இவைகளைத்தவிற கும்பகோணத்திலுள்ள க்ஷேத்திர மூர்த்திகளான விஷ்ணுமூர்த்தி சிவமூர்த்திகளாவன.—

(தொடரும்.)



# திருப்பதி ஸபைகள்.

## உன்னுஹினி ஸபை.

ஸ்ரீமான் கஞ்சி சுப்பராயரவர்களின் இந்த ப்ராசின ஸபையை ஸம்ஸ்கிருத காலேஜாய் மாற்ற சென்றவருஷம் அதன் பொது அங்கத்தினர்கள் தீர்மானம் செய்ததால் இச்சபையின் வித்வத்பரிக்ஷை ஸம்பாவனை பிராம்மண போஜனாதிகள் நடைபெறவில்லை. ஆயினும் ஸ்ரீமத்வஸித்தாந்த உன்னுஹினி சபை உத்தேஜக ஸமாஜம் என்ற ஓர் சங்கத்தின் அங்கத்தினர்கள் இச்சபை நின்றுவிட்டதென்ற அவப்பெயர் வாலாகாதென்ற நோக்கத்துடன் 28, 29உகளில் மகந்து சத்திரத்தில் ஓர் சபையை நடத்தினார்கள். அதற்கு உத்தேஜக ஸமாஜத்தாரால்நடத்தும் ஸ்ரீமத்வஸித்தாந்த உன்னுஹினி ஸபை என்று விளம்பரத்துணி தொங்கவிட்டிருந்தது. ஸ்ரீமவே ஹொளவனஹள்ளி சேஷாசாரியார், கோயமுத்தூர் விஜயீந்திராசாரியார், வய்யூர் ஸ்ரீனிவாஸாசாரியார், தொட்டபள்ளாபுரம் வாஸுதேவாசாரியார், தெக்கலூர் கிருஷ்ணாசாரியார், மைசூர் D. ஸ்ரீனிவாஸாசாரியார் முதலிய பண்டிதர்களும். ஸ்ரீமான்களான ராவ்பகதூர் S. N. V. ராஜாசாரியார், ரிடையர்டு சப்ஜட்ஜ்களான குருராஜராவ், சாமராவ் இவர்கள், ரிடையர்டு டிபுடிகலெக்டர் வாஸுதேவராவ், ரிடையர்டு அஸிஸ்டெண்ட் கமிஷனர் ஹயக்ரீவராவ், ரிடையர்ட் போலீஸ் சூபரிண்டெண்டு ஆரணி சுப்பராவ், P.S. கோபாலகிருஷ்ணராவ் முதலிய லௌகிகர்களும் வந்திருந்தனர். வித்வத்பரீக்ஷையில் வித்வான்களும் வித்யார்த்திகளுமாய் சுமார் 50 பேர் இருந்தனரென்றும் ரூ 20 முதல் 3 ரூ வரை ஸம்பாவனை செயயப்பட்டதென்றும் தெரியவருகிறது. 28உயன்று ஸ்ரீமான் ஆரணி சுப்பராவ் அவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் உத்தேஜகஸமாஜத்தின் 2வது வருஷோற்சவமும் கொண்டாடப்பட்டது. முதல் வருடத்திய அச்சான ரிபோர்ட் வினியோகம் செய்யப்பட்டது. பிறகு 2-வது வருடத்திய ரிபோர்ட்டை ஸ்ரீமான் குருராஜராவ் ஆங்கிலத்திலும் P.S. கோபாலகிருஷ்ணராவ் தமிழிலும் படித்தனர். இந்த ஸமாஜத்திற்கு 120 அங்கத்தினர்கள் இருப்பதாயும் வரவு ரூ. 3896–14–11 என்றும் சிலவு ரூ. 2392–4–3 என்றும் இன்னமும் ரூ. 942 வசூலாக வேண்டியிருக்கிறதென்றும் ஸ்ரீமான்களான ஆரணி சுப்பராவ் T. சாமராவ் இவர்கள் மைசூர் ஹைதராபாத் மகாணங்களில் சஞ்சாரம் செய்துதாவா நடத்த பணத்தை வசூலித்தனரென்றும் கண்டிருந்தது. உன்னு

ஹினி சபையை கலைக்கவும் காலேஜாய் மாற்றவும் தீர்மானங்கள் ஏற்பட்டவுடன் அவை நடைபெறாமலிருக்க கோர்ட்டு மூலமாய் பரிகாரம் தேடிக்கொள்ளவும் சபையை வழக்கப்படி நடத்தவும் இந்த ஸமாஜத்தார்களால் தீர்மானிக்கப்பட்டதாகவும் அதன்படி சித்தூர் ஸப்கோர்ட்டில் ஸ்கீம் தாவா O.S. 25/32 செய்யப்பட்டு அதில் இச்சபையை காலேஜாய் மாற்றாமலிருக்க தடை உத்தரவு பெற்றதாயும், ஸபையை நடத்த ரிஸிவர் ஏற்படுத்தப்போட்ட மனு கோர்ட்டாரால் தள்ளப்பட்டதால் அவஸரத்தில் இந்த ஸமாஜத்தாரால் இவ்வருடம் உபாயமாய் இச்சபை நடத்தப்பட்டதென்றும் ஸபையின் நீடூழி வாழ்க்கையில் இச்சைகொண்ட தாராள நோக்கமுள்ளவர்கள் யாவரும் வருடம் 1-க்கு ரூ. ஒன்று சந்தா தொகை செலுத்தி இந்த ஸமாஜத்தின் அங்கத்தினர்களாய் சேரவேண்டுமென்றும் ஸ்ரீமான்களான ஆரணி சுப்பராவ் முதலியவர் அறிவித்தனர்.

## அங்கத்தினர்களின் மீட்டிங்கு.

பீஜப்பூர் ஜில்லா ஜட்ஜ் ஸ்ரீமான் ஆனந்தராவ் அஸூண்டியின் அக்கிராஸனத்தின்கீழ் ஸபாமந்திரத்தில் 29உயன்று மாலையில் இது நடந்தது. வழக்கப்படி உத்தராதி மடத்தார்கள் சுமார் 65 பேர் ஒரு ப்ளாக்காகவும் இதர மடத்தார்களான ஸ்ரீமான் ராவ்பஹதூர் S N.V. ராஜாசாரியாரின் கோஷ்டியினர் சுமார் 18 பேர் ஓர் ப்ளாக்காகவும் உட்கார்ந்தனர். புதிய வருடத்திய வரவு சிலவு திட்டம் வாசிக்கப்பட்டது. சித்தூர் வியாஜ்யசிலவுக்காக ரூ. 1000 ஒதுக்கிவைக்கப்பட்டிருந்ததை ரூ. 2000 என ஜாஸ்தி செய்யவேண்டுமென்று தீர்மானம் நிறைவேறியது. ஸம்ஸ்கிருத காலேஜுக்காக ரூ. 3000 ஒதுக்கிவைக்கப்பட்டிருப்பதாய் ஏற்பட்டது. ஆடிடருடையவும் காலி செய்யும் கௌன்ஸில் மெம்பர்களுடையவும் தேர்தல்கள் நடந்தன. இதர மடத்தார்கள் செய்த ஆக்ஷேபணைகளோ அல்லது நியமனங்களோ யாதொன்றும் பாஸாகவில்லை. ஸ்ரீமான் ஸத்யானந்த ராமாசாரியார் ஓர் புதிய தீர்மானத்தைக்கொண்டுவர அது நிறைவேறியது. அதில் ஒரு சிலர் இந்த சபையை நடத்துவதற்காகவென்று திரவியங்களை மகாஜனங்களிடமிருந்து வசூலித்திருப்பது இந்த சபைக்குச் சொந்தமானதென்றும் அப்படி வசூலித்ததைக்குறித்து அவர்களின்மீது கோர்ட்டு நடவடிக்கைகளை சீக்கிரமே இச்சபையின் காரியதரிசி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனால் இச்சபையை அடுத்த வருடம் உத்தேஜக ஸமாஜத்தார் நடத்தமுடியாதென்று பலர் அபிப்பிராயப்பட்டனர். ரூல்களில் சிலவற்றை மாற்றி



யும் சேர்த்தும் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. தாவா முடிந்தபின் இதை எடுத்துக்கொள்ளலாமென்று ஆக்ஷேபணைகள் வந்தும் அவை நிராகரிக்கப்பட்டு தீர்மானங்கள் மெஜாரிட்டியில் நிறைவேறின.

## அபிவிருத்திகாரிணி ஸபை.

ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் காசியில் முகாம் செய்திருப்பதால் ஸ்ரீமடம் திவான்களான ஸ்ரீ ம.வே. கல்லாபுரம் ஜய்யாசாரியார் பாண்டுரங்கி ஜய்யாசாரியார் இவர்கள் மேற்பார்வையில் இச்சபை 26 27, 28, 29உ களில் வெகு பரிஷ்காரமாய் நடந்தது. ஸ்ரீ.ம.வே. பெரியகுளம் ராமச்சந்திராசாரியார், ஆனேகல் ஸ்ரீனிவாஸாசாரியார், உடுபி ராமகிருஷ்ணாசாரியார், ஸ்ரீரங்கம் கோபாலாசாரியார், வீரசோழபுரம் கிருஷ்ணாசாரியார் முதலான சுமார் 100 பண்டிதர்களும் 400 வித்யார்த்திகளும் வந்திருந்தனர். வழக்கப்படி வடதேசங்களிலிருந்து அநேக லௌகிகர்களும் ஸ்ரீமான் ரிடையர்டு டிப்டிகலெக்டர் ராகவேந்திராவ் நாராயணராவ் முதலான இச்சபையின் காரிய நிர்வாக கமிட்டி மெம்பர்களும் வந்திருந்தனர். வித்வத்பரீக்ஷைகள் வாக்யார்த்த விசாரங்கள் முதலியவை கிரமப்படி நடந்ததுமன்றி சரியான காலத்தில் பிரதிதினமும் ஒவ்வொரு பக்ஷணத்துடன் சொகுசான மிருஷ்டான்ன போஜனமளிக்கப்பட்டுவந்தது. ஸ்ரீஸ்வாமிகளின் அறுபதாவது வருடம் ஸம்பூர்த்தியானதை முன்னிட்டு ஸபையின் கடைசி நாளில் விவாஹகாலத்தில் சம்பந்திகளுக்கு எப்படி உபசாரணை விருந்து செய்யப்படுமோ அந்த ரீதியில் சித்ரவர்ணக்கோலங்களுடன் தீபதூபங்கள் ஏற்றிவைத்து சுமார் 2000 ஜனங்களுக்கும் ஓர் பெரிய விருந்து அளிக்கப்பட்டது. அதுவுமன்றி வித்வான்களுக்கு யதேச்சமான சம்பாவனையும் செய்யப்பட்டது. வித்வான்களுக்கு ஸபாநிமித்தமாக ரூ. 65-ம் ஸ்ரீஸ்வாமிகளின் ஸம்பாவனையாக ரூ. 20-ம் ஆக ரூ. 85 கொடுக்கப்பட்டன. இதர்களும் அவர்களின் யோக்யதா கிரமப்படி விசேஷமான ஸம்பாவனையைப் பெற்றனர். ஸ்ரீஸ்வாமிகள் காசியிலிருந்தபோதிலும் அடிக்கடி தந்திகளை அனுப்பி ஸபை செவ்வனே நடைபெறும்படி ஆக்ஞையிட்டுவந்தார். திவான் பாண்டுரங்கிஜய்யாசாரியாரவர்களும் அனைவரும் கொண்டாடக்கூடிய ரீதியில் நடந்துகொண்டதைக்கண்டு எல்லோரும் மகிழ்ந்தனர். 27உயன்று மாலையில் திவான்களின் எதிரில் ஸ்ரீ.ம.வே. ஸ்ரீரங்கம் பீமாசாரியார் ஸ்ரீஸ்வாமிகளின் சரித்திரத்தை அழகாய் உபன்யசித்தார். [இது

அடுத்த ஸஞ்சிகையில் பிரசுரிக்கப்படும் ] 28உயன்று மாலையில் ஸ்ரீஸ்வாமிகளின் ஷஷ்டியப்த பூர்த்தியை முன்னிட்டு அவர்களின் திருவுருவப் படத்தை மோட்டாரில் வைத்து, புஷ்பஹாராதிகளால் அலங்கரித்து இருபுறமும் போலீஸார் மோட்டாரில் நின்று பாரா கொடுக்கவும், சத்ர சாமராதி வைபவங்கள் புடைசூழ, வைதிகர்கள் அணிவகுத்து நின்று வேதபாராயணம் செய்ய, வித்யார்த்திகள் ஸுஸ்வரமாய் மத்வவிஜய சுலோகங்களை கோஷிக்க, தாஸவர்க்கங்கள் ஹரி பஜனைகளைச்செய்துவர, பண்டித கோஷ்டிகள் கைகோர்த்து உல்லாஸமாய் நடக்க, லௌகிக உத்யோகஸ்தர்கள் அங்கி முண்டாசு முதலிய உத்யோக உடைதரித்து தங்கள் பக்தியைக்காட்ட பலவகை பணிவிடை செய்துவர, சாமானியர்கள் ஜயவிஜயீபவ ஸ்ரீஸத்யத்தியானதீர்த்தஸ்வாமிகளிகே ஜேய் என்று ஜய கோஷங்கள் கோஷிக்க, ஸுவாஸினி ஸ்திரீகள் ஆரார்த்திகை எடுத்து ப்ரதக்ஷிணம் செய்துவர, ஸகலவித மங்கள வாத்ய கோஷங்களுடன் ஸ்ரீ பத்மஸரோவரம் சுற்றிவந்து ஊர்வலம் சபையின் கட்டிடத்தில் வந்திறங்கியது. இந்த நற்காக்ஷியைக்கண்ட யாவரும் ஸ்ரீஸ்வாமிகளே மூர்த்திமானாய் அங்கு ஸன்னிஹிதராய் இருந்ததாக பேசினார்கள். பிறகு எண்ணிறைந்த பண்டிதர்கள் தான் முன்னே தான் முன்னே என்று போட்டி போட்டுக்கொண்டு ஸ்ரீஸ்வாமிகளின் குணானுவாதம் செய்து உபன்யாஸங்களைச் செய்தனர். உபன்யாஸம் செய்தவர்கள்:— ஸ்ரீமவே. சிஞ்சோளி வெங்கண்ணாசாரியார், ஸுரபுரம் ஜகந்நாதாசாரியார், உடுபி ராமகிருஷ்ணாசாரியார், வீரசோழபுரம் கிருஷ்ணாசாரியார், கௌலகி யதுநாதாசாரியார், மைசூர் N. வெங்கட்டராவ், உடுபி கட்டே ஸ்ரீனிவாஸாசாரியார், ஹைதராபாத் தாதாசாரியார் காளி, உடுபி கட்டே சுப்பண்ணாசாரியார் முதலியோர்.

## விசேஷதினங்கள்.

### மாகமாஸம்.

| | | |
|---|---|---|
| 26-1-33 | குருவாரம் | சிரவண உப. விஷ்ணு பஞ்சக உப. |
| 1—2-33 | புதவாரம் | ரதஸப்தமி. |
| 2—2-33 | குருவாரம் | பீஷ்மாஷ்டமி. |
| 4—2-33 | சனிவாரம் | ஸ்ரீமத்வநவமி. |
| 6—2-33 | சோமவாரம் | ஏகாதசி. |
| 7—2-33 | மங்களவாரம் | பீஷ்மத்வாதசி, ஸ்ரீஸத்யஞானதீர்த்தர் புண்யதினம். |
| 15-2-33 | சுக்ரவாரம் | பௌர்ணமி. |
| 20-2-33 | சோமவாரம் | ஏகாதசி. |
| 22-2-33 | புதவாரம் | மகாசிவராத்திரி. |
| 23-2-33 | குருவாரம் | சிரவணம், உபவாஸமில்லை. |
| 24-2-33 | சுக்ரவாரம் | அமாவாசை, விஷ்ணு பஞ்சக உப. உண்டு. |



# செய்தித்திரட்டு.

உடுபி ஸ்ரீ கிருஷ்ணர் கோயிலில் கார்த்திக ரதோற்சவ காலத்தில் சண்டாளர்களை தாராளமாய் கலந்துகொள்ளும்படி அனுமதிக்கப்பட்டதாயும், சண்டாளர்களின் தேவாலய ப்ரவேசத்தைப்பற்றி அஷ்டமடாதிபதிகளின் அபிப்பிராயம் என்னவென்பதைப்பற்றி அச்சங்கத்தார் நோட்டீஸ் மூலமாய் கேட்டிருப்பதாயும் ஓர் செய்தி ஹிந்து பத்திரிகையில் சென்ற மாதத்தில் வெளியாக அதன் உண்மையையறியவும், மாத்வர்களின் ப்ரதானமாயும் ஒரே கோயிலாயுமுள்ள அக்கோயிலுக்குள் சண்டாளர்கள் பிரவேசிக்காதிருக்க பலமான எற்பாடு செய்யவேண்டுமென்றும் அங்கு நடக்கும் ஸம்பவத்தை இந்நாடு மாத்வர்கள் ஆவலாய் எதிர்பார்க்கின்றனரென்றும் நாம் ப்ரகிருதம்பரியாய ஸ்வாமிகளாயுள்ள ஸ்ரீ ஸோதேவாதிராஜமடம் ஸ்ரீவிசுவேந்திரதீர்த்தஸ்வாமிகளுக்கு கடிதமெழுதியனுப்பியதற்கு, ஸ்ரீ ஸ்வாமிகள் இப்பத்திராதிபருக்கு அனுப்பிய22-10-32உ நிருபத்தில் இந்தச் செய்திக்கு சற்றும் ஆதாரமில்லையென்றும், ரதா கர்ஷண விஷயத்தில் தாம் சண்டாளர்களை அனுமதியளிக்கவில்லையென்றும், அவர்களுக்கு தேவாலய ப்ரவேசத்திற்கு எப்பவும் அனுமதியளிக்கப்படப்போவதில்லையென்றும், இப்படியே இதர மடத்தார்களும் சரியே, பிராம்மணர்கள் முதலிய ஆஸ்திகர்கள் யாவரும் சரியே, சண்டாளர்களின் தேவாலய ப்ரவேசத்தையும், அவர்களின் தீண்டாமையையும் ஸம்பூர்ணமாய் நிஷேதிக்கின்றனரென்றும் தீண்டாதாரர்களிலும் 100க்கு 95 பேர் தேவாலய ப்ரவேசத்தை ஒப்புக்கொள்வதில்லையென்றும், காங்கிரஸ் கக்ஷியினர்களில் சிலர் மட்டில் இதற்காக பிரயத்தனப்படுகின்றனரென்றும், இதை எங்கும் ப்ரவசித்தப்படுத்தி மாத்வர்களுக்கு ஆறுதலளிக்க வேண்டுமென்றும் எழுதப்பட்டிருக்கிறது.

திருப்பதி ஸ்ரீ மத்வஸித்தாந்த அபிவிருத்திகாரிணி சபையின் ஆதரவில் 29-12-32உயன்று காலையில் மாத்வர்களின் பெரியதொரு மகாநாடு கூடி சண்டாளர்களின் தேவாலய ப்ரவேசத்தைக் கண்டித்து தீர்மானங்களைச்செய்து அரசாங்கத்தார் இதற்கு ஆதரவளிக்கலாகாதென்று கனம் வைஸ்ராயிக்கு தந்தியும் மகஜர்களும் அனுப்பிக்கப்பட்டது.

மைசூர் மாகாணம் ஸோஸலே ஸ்ரீவியாஸராஜமடம் ஸ்வாமிகளுக்கு 16-12-32 முதல் 21-12-32 வரை 6 நாட்கள் திருச்சியில் பிக்ஷை நடந்ததென்றும், ஓர் பொது பிக்ஷையும் விரிவாய் மகாஜனங்களால் நடத்

தப்பட்டதென்றும் ஸ்ரீ கோபாலகிருஷ்ணமூர்த்தியின் பூஜாதிகளைப் பார்க்க ஏராளமாய் ஜனங்கள் கூடியிருந்தனரென்றும் ஸ்ரீமான் C. R. ஸ்ரீனிவாசராவ் அறிவிக்கிறார்

ஸ்ரீ வியாஸராஜமடம் ஸம்ஸ்தானாதிபதி ஸ்ரீ வித்யவாரிதிதீர்த்த ஸ்வாமிகள் தென்னாட்டு சஞ்சார கிரமத்தில் திருச்சி, சிந்தலவாடி, திருக்காம்புலியூர் முதலிய இடங்களுக்குச்சென்று 2—1—33உயன்று கரூர் வந்து அங்குள்ள மகாஜனங்களால் வரவேற்கப்பட்டு ஸ்ரீமான் அண்ணாஜிராயரின் சத்திரத்தில்தங்கி கரூர் மகாஜனங்களால் பெரியதொரு பிக்ஷை நடத்தப்பட்டதென்றும் அவர்களின் சிஷ்யர்களும் இதர மடத்தார்களும் பிக்ஷை நடத்திவருகின்றனரென்றும் சந்திரிகாசாரியாளின் பீடாதிபதியான ஸ்ரீ ஸ்வாமிகளை உற்சாகப்படுத்துவது மாத்வ மகாஜனங்களின் கடமையென்றும் கரூரிலிருந்து சீக்கிரம் ஆண்டாங்கோயில் பிரயாணமாவாரென்றும் ஓர் நிருபர் அறிவிக்கிறார்.

ஸ்ரீஜயதீர்த்தர் இந்திராம்சம், ஸ்ரீவியாஸராஜர் பிரஹ்லாதாம்சம், ஸ்ரீ ராகவேந்திரர் பிரஹ்லாதாம்சம் என்றிவ்வாறு பண்டிதர்கள் இதுகாறும் பிதற்றுவதெல்லாம் மூட்டாள்தனமென்றும், தாஸர்களெல்லாம் மோசக்காரர்களான வேஷதாரிகளென்றும், அவர்களின் வார்த்தை நம்பத்தகுந்ததல்லவென்றும், ஜயதீர்த்தவிஜயம் முதலியவைகளை கிழித்து குப்பைத்தொட்டியில் போடவேண்டுமென்றும், தாத்பர்ய நிர்ணயத்தில் 32வது அத்யாயத்தில் ஸ்பஷ்டமாய் இந்திராதிதேவர்களுக்கு கலியுகத்தில் பிறப்பில்லை என்று சொல்லியிருக்கிறதென்றும், ஸாம்சஜீவர்களுக்கு இன்னின்ன அம்சம்தான் என்று,ஸ்ரீபகவத்பாதாளாலேயே நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதென்றும், மந்திராலயம்முதலிய இடங்களிலுள்ள பிருந்தாவனத்தில் ஸ்ரீராகவேந்திரர் போன்றவர்கள்பிசாச சரீரத்துடன்இருப்பதாகத்தான் சொல்லவேண்டுமென்றும், இல்லையேல் அவர்களுக்கு வேறுசரீரம் ஏற்படமுடியாதென்றும், பிருந்தாவன மிருத்திகையில்ஸந்நிதானமிருப்பதாய்சொல்வது அத்தப்பாட்டி கதையென்றும், இவ்வுண்மையை அறியாமல் மூடநம்பிக்கையுடனுள்ளவர்களெல்லாம் இது என் தந்தையின் கிணறென்று கண்மூடித்தனமாய் உப்பு ஜலத்தை குடிக்கும் குச்சித புருஷர்களே என்றும், இதற்கு சரியானபடி பதில் சொல்லமுடியாமல் யாவரும் திகைப்பார்கள்தானென்றும், ஸ்ரீ வெங்கடாசலபதிக்கு உண்டி என்பது அப்ரஸித்தமென்றும், அதில் பணம் போடுவது மகா பாபமேயென்றும் நரகத்திற்குக் காரணந்தானென்றும், எந்த புராணங்களிலும் இந்த உண்டி இருப்பதாய் பிரஸ்தாபிக்கவில்லையென்றும், இரண்டு பிரஸித்த மாத்வ



வித்வான்கள் உறுதி கூறுகின்றனர். [மாத்வர்களின் ப்ராசீனமான பழக்க வழக்கங்களை வேருடன் அறுத்தெரியும் இந்த அசாஸ்திரீய தீர்மானத்தைப்பற்றி ஆங்காங்குள்ள பண்டிதர்கள் சிரமம்பாராமல் தங்கள் அபிப்பிராயத்தை அறிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். இது ஸம்பந்தமாக வரும் எல்லா நிருபங்களையும் பிரசுரிக்கத் தயாராயிருக்கின்றோம்.] [ப—ர்.

## மதிப்புரை.

---

### ஸ்ரீ விநாயக பூஜாவிதி.

---

மாத்வர்களின் அனுஷ்டானத்திலிருந்துவரும் ஸ்ரீ விநாயக பூஜாவிதியை தமிழ் எழுத்தில் தேவநாகரம் முதலான அக்ஷரங்களைத்தெரியாத ஸாமானியர்களுமே அறிந்து பூஜை செய்யும்படி ஸ்ரீமான் கே. சாரங்கபாணிராவ் இந்நூலை அச்சிட்டு வெளியாக்கியிருக்கிறார். இரண்டணா போஸ்டேஜ் ஸ்டாம்பை அடியிற்கண்ட விலாஸத்திற்கு அனுப்பி இப்புத்தகத்தைப்பெறலாம்.

மானேஜர், ஸ்ரீகிருஷ்ணவிலாஸ் புஸ்தகசாலை,
ஸ்ரீ சக்ரபாணிஸ்வாமி கோவில் வடக்கு வீதி, கும்பகோணம்.

### திருக்குடந்தை புராணவசனம்.

---

கும்பகோணம் பஜார் போஸ்ட் மாஸ்டர் ஸ்ரீமான் பு. து. இரத்தினசாமி பிள்ளை எழுதிய இவ்வரிய நூல் வெளியாகி எமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமான விளம்பரம் எமது மித்திரனில் ஏற்கனவே வெளியாயிருக்கிறது. அதில் கண்டபடி 55 படலங்களாக திருக்குடந்தை மாகாத்மியத்தை தமிழ் திருக்குடந்தை புராண வசனத்தின்படி இனிய தமிழ்நடையில் ருசிகரமாய் ஸ்ரீமான் பிள்ளையவர்கள் சங்கிரஹித்து எழுதியிருக்கிறார். இதில் திருக்குடந்தை ஸம்பந்தமான தேவாரங்கள், திருவாய்மொழிகள், புராண வசனங்கள் இவைகளின் திரட்டும் ஸ்ரீ மகாமக தீர்த்தத்திலுள்ள அநேக தீர்த்தங்களைக் காட்டக்கூடிய படமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. மகாமக ஸந்தர்ப்பமாகிய இச்சமயம் இந்நூல் யாத்ரீகர்களுக்கு மிகவும்

உபயோகமானது. விலை அணு 10. தபாற்கூலி வேறு. புஸ்தகம் வேண்டுவோர் இப்பத்திரிகாலயத்திற்கும், அடியிற்கண்ட விலாஸத்திற்கும் எழுதலாம்.

மா. சிங்காரவேலுபிள்ளை, பதிப்பாசிரியர், 92, பேட்டை நாணயக்காரத்தெரு, கும்பகோணம்.

## ஸ்ரீமத் ஸ்தோத்ர ரத்னவளி.

மகாமஹோபாத்யாயம் ஸ்ரீமான் ஸ்ரீமுஷ்ணம்வ்யாகரண சுப்பராயாசாரியாரவர்களின் குமாரரான திருப்பதி ஸம்ஸ்கிருத காலேஜ் வியாகரண ப்ரதான பண்டிதர் ஸ்ரீமான் ஸேதுமாதவாச்சாரியாரவர்களால் இந்நூல் தயாரிக்கப்பட்டு அச்சாகி எமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதில் பிரஸித்தர்களான பல ஆசாரியர்களின் ஸ்தோத்ரங்களுடன் ஸ்ரீமுஷ்ணாசாரியர்கள் செய்த ஸ்தோத்ரங்களும் முக்யமான ஸ்வாமிகளின் புண்ய தினங்கள், ப்ராசீனமான க்ரஹணதோஷசாந்தி மந்திரங்கள், ஸ்ரீமுஷ்ணம் தண்ட தீர்த்த மகிமை, பூவராஹகவசம், அஷ்டோத்தர நாமாவளி, கோனேரி ஆசாரியார் செய்த ஹயக்ரீவ தண்டகம் முதலியவை சேர்க்கப்பட்டிருக்கின்றன. ப்ராசீன ஸம்ப்ரதாய ஸ்தோத்ராதிகள் நாளடைவில் மறைந்து போகக்கூடாதென்ற மேலான நோக்கத்துடன் விஷ்ணு ஸ்தோத்ரங்களை படனம் செய்வதும் நித்யாஸனமாகுமென்றறிவித்து, இந்நூலை பிழையின்றி தம்பார்வையிலேயே சோதித்து உயர்ந்த காகிதத்தில் அழகான எழுத்தில் மதராஸ் ஹிந்தி ப்ரசார பிரஸ்சில் புஸ்தக அளவில் சுமார் 100 பக்கங்களாக அச்சிட்டு ஸ்ரீமவே ஆசாரியார் வெளியிட்டிருக்கிறார். இந்நூலில் கண்டுள்ள ஸ்ரீ ஹயக்ரீவதண்டகத்தை எல்லோரும் பாராயணம் செய்யவேண்டுமென்று தனிப்புத்தகமாய் அதன் வ்யாக்யான குறிப்புகளுடன் அச்சிட்டு இவ்வருடம், ஸபாகாலத்தில் எல்லோருக்கும் இலவசமாய் கொடுத்துள்ளார். மாத்வர்களுக்கு மிகவும் உபயோகமான இந்த நூலை வேண்டுவோர் 5 அணு போஸ்டேஜ ஸ்டாம்பு அனுப்பி இதன் ஆசிரியரிடம் பெறலாம்.

208701